பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | புரட்டாதி 23 | ஜூல்-கஃ 28 | இதழ் 240
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 9 - 10 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1980 -10- 9 PERIODICALS DIVISION LIBRARY

## யாழ்ப்பாணத்தில் தனிநாயகம் சர்வதேச தமிழாராய்ச்சி நிறுவகம்

(கொழும்பு)

காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் தவத்திரு தனிநாயகம் அடிகளார் ஞாபகார்த்தமாக 'தனிநாயகம் சர்வதேச தமிழாராய்ச்சி நிறுவகம்' ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும்.

இந்தகவலை அகில உலக தமிழாராய்ச்சி மன்றத்தின் கொழும்புக்கிளையின் பொதுச் செயலாளர் திரு. வி. எஸ். துரைராஜா தெரிவித்தார்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தனிநாயகம் அடிகளாரின் இரங்கற் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. துரைராஜா மேற்கண்டவாறு கூறினார்.

'தனிநாயகம் சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம்' நம்பிக்கைப் பொறுப்புகுழு ஒன்றின்

8-ம் பக்கம் பார்க்க)

## அபடான் எண்ணெ ஆலை தீப்பற்றி எரிகிறது

## ஜோர்டானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

## சிரியா, லிபியா ஈரானுக்கு ஆதரவு

# ஈரான் முழுமையான இறுதி யுத்தத்திற்கு தயாராகின்றது!

## 'ஹொரம்சர்' நகரை ஈராக் படைகள் முற்றுகை

லண்டன், அக், 8

ஈரான்-ஈராக் போரில் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் ஈராக் துருப்புக்களைத் தடுத்து நிறுத்த ஈரான்படைகள் சகலமுனைகளிலும் கடும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கும்வேளையில் ஈரானியப்படைகள் முழுமையான இறுதி யுத்தத்திற்கு தயாராகிவருகிறதென்றும் எந்நேரத்திலும் இறுதிப்போராட்டத்தை அப்படைகள் ஆரம்

(8-ம் பக்கம் பார்க்க)



"உழைக்கப் பிறந்த எமக்கு உதவும் கரங்கள் இல்லையா?" என்று ஏங்குகின்றார்கள் இங்கு மூவர்! யாழ். ஆஸ்பத்திரியில், சுன்னாகத்தைச் சேர்ந்த உத்தராடம் செல்வராசாபெற்றெடுத்த பெருஞ்செல்வங்கள், பிஞ்சு உள்ளங்கள் மூவர்—திலிக்குமார், சிறிக்குமார், சிவக்குமார் தங்களின் எதிர்காலவாழ்வுக்கு அன்னையின் அரவணைப்பில் அன்பு இதயங்களை எதிர்பார்க்கின்றனர் உங்கள் உதவியில் இவர்கள் வாழ்வு மலரட்டும்.

உ

சிவமயம்

நகுலேஸ்வரம்
(கீரிமலை)

அருள்மிகு ஸ்ரீநகுலேஸ்வர ஆலய

புரட்டாதி மீ கடைசிச் சனி வார விசேட பூசைகள் கலிதீர்த்த நகுலேஸ்வரஸ்வாமி ஆலயத்தில் வெகுவிமரிசையாக நடைபெறும்.

அதிகாலை 5 மணி தொடக்கம் விசேட நவக்கிரக சாந்தி திலஹோமம் எள்தீபம் ஏற்றுதல் முதலியன வழமைபோல் நடைபெறும். அடியார்கள் அனைவரும் விரதமனுஷ்டித்து சங்கல்பம் செய்து கண்டகிதீர்த்தமாடி எள்தீபம் நவக்கிரகசாந்தி முதலியன நடாத்தி கலிதீர்த்த நகுலேஸ்வரபெருமானின் கிருபாகடாக்ஷத்தை பெற்றுய்வீர்களாக.

பி. ப. 4மணி தொடக்கம் அளவை அருட்கவி சீ. விஞசித்தம்பி அவர்களால் கலிதீர்த்த நகுலேஸ்வரன் என்ற பொருள் பற்றி சிறந்த உபந்நியாசம் நடைபெறும்.

கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஷை கோயில் ஆதீனகர்த்தா

நகுலேஸ்வரம்
(கீரிமலை)
8-10-80.

7040

(கொழும்பு)

## கலவான எம். பி. தெரிவு செல்லுபடியற்றது!

### முன்னைய தீர்ப்பு ஊர்ஜிதம்

கலவானத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. பி. பிலப்பிட்டியவின் மேன்முறையீட்டு மனுவை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

கலவானத்தொகுதி எம். பி. யும் தபால் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சருமான திரு. அபேரத்ன பிலப்பிட்டிய தமக்கு எதிராக நீதியரசர் ஜனப் எம். எம். அப்துல்காதர் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். பிரதம நீதியரசர் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## எச்சரிக்கை

எனது பெயரைச் சொல்லியும் சாட்டியும் ஒருவர் பல இளைஞர்களுக்கு குவைத்தில் வேலைகள் பெற்றுத் தருவதாக உறுதியளித்து பணக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறேன். பொதுமக்களுக்கு இத்தால் அறிவிப்பது யாதெனில் நான் ஒரு வேலை தேடிக் கொடுக்கும் ஏஜெண்டல்ல. அத்துடன் இவ் விடயங்களில் எவ்வித தொடர்போ, சம்பந்தமோ எவருடனும் கொண்டிருக்கவில்லை என்பதையும் கூறி இத்தகைய விடயங்களுக்கு நான் பொறுப்பாளியல்லவென்றும் இதில் ஈடுபடுவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன் எனவும் எச்சரிக்கை செய்கிறேன்.

த. கனகசபை,
த. பெ. இல. 769
குவைத்.

7028

## தமிழகசபாநாயகர் யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் திரு. ராஜாராம் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

நேற்றுமுன்தினம் இலங்கை

8-ம் பக்கம் பார்க்க

## வீடமைப்புத் திட்டம் இடைநிறுத்தம்

(உடுப்பிட்டி)

கன்பொல்லை மாதிரிக் கிராம வீடமைப்புத் திட்ட வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட

(8-ம் பக்கம் பார்க்க)

## போட்லண்ட் சீமெந்து விநியோகம்

கட்டட நிர்மாண வேலைகளை மேற்கொள்வோருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கும், இலங்கைச் சீமெந்து கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட போட்லண்ட் சீமெந்து விநியோகஸ்தர்களாக நாங்கள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**காங்கேசன் போட்லண்ட் சீமெந்து பை ஒன்று (50 KG) ரூபா 65–50**

விலைக்கு (லொறி கூலி உட்பட) உங்கள் வேலைத் தளத்திற்கு நேரில் விநியோகம் செய்ய காத்திருக்கின்றோம்.

நன்றி

கணபதிப்பிள்ளை ஸ்ரோஸ்,
பிரதான வீதி, சுன்னாகம்.
தொலைபேசி இல. 223 சுன்னாகம்

(7039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

EN - மொறிஸ் மைனர் எண்ணூயிரம் வரிசை பதிவு இலக்கம் உடைய தனிப் பாவனைக்கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு - "இராஜஸ்தான்" 5-ம் கட்டைடை முன்னால், ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். 7014

சாவகச்சேரி டச்சு வீதியில் முதலாம் மைலுக்குள் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: வ. சின்னத்துரை, இளைப்பாறிய வரியறவிடுபவர், டச்சு வீதி, சாவகச்சேரி. 7027

பாடசாலைப் பாவனைக்குரிய மேசை, வாங்கு, கரும்பலகை, தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம், டுப்ளிக்கற்ரர் ஆகியவை விற்பனைக்குண்டு. 38, சீனிவாசகம் வீதி, கொட்டடி. 7024

வீட்டுப்பாவனைக்கு சுந்த சாப்பாட்டு மேசை தளபாடங்கள், படுக்கையறை அலுமாரிகள், எலெக்றிக் குக்கர் மற்றும் பொருட்கள் விற்பனைக்குண்டு. தில்லைநாதன், புகையிரதநிலைய வீதி, தெல்லிப்பழை. 7026

### தேவை

பாதுகாப்புச் சேவைக்கு ஆட்கள் தேவை. ஓய்வுபெற்றவர்களும் வரலாம். நற்சாட்சிப்பத்திரங்களுடன் 11-10-80 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையில் தெல்லிப்பழை தபால் கந்தோருக்கு அருகாமையிலுள்ள பாதுகாப்புச்சேவை அலுவலகத்திற்கு நேரில் வரவும். 7031

நல்ல சுகதேகமுள்ள நம்பிக்கையான காவற்காரர் தேவை. உடனே நேரில் வரவும், அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7025

## நவராத்திரி விழா

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நவராத்திரி விழா நாளை 10-ம் திகதி ஆரம்பமாகிறது. இம்மாதம் 17-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் நவராத்திரி விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக சங்கீத பூஷணம் ஏ. கே. கருணாகரனின் சங்கீதக்கச்சேரியும், திருமதி வசந்தா வைத்தியநாதனின் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சூராவத்தை முத்துமாரியம்மன கோவிலில் நவராத்திரிப் பூசை இன்று ஆரம்பமாகிறது.

இதனையொட்டி பத்துத் தினங்களுக்குத் தினமும் இரவு திரு. சி. சண்முகவடிவேல் 'அபிராமி அந்தாதி' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார். (வெ)

## வீட்டுத்தோட்டப் போட்டி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கிடையில் வீட்டுத்தோட்டச் செய்கைப் போட்டி ஒன்றை எதிர்வரும் மார்கழி மாதத்தில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது (அ

## பிஸ்கால் ஏல விற்பனவு விளம்பரம்

### மாவட்ட மன்று யாழ்ப்பாணம்

வழ. இல. M S/205

1. வி. சேவியர் யோக்கிம்
2. பெண் முத்தம்மா

வழக்காளி

எதிராக

1. குருசாமி
2. பெண் மரியம்மா

சிறுவிழான், இளவாலை.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்கு இலக்கம் M S/205ல் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனத்தை 1980-ம் ஆண்டு கார்த்திகை 5-ந் திகதி பிற்பகல் 1 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 4950-00 இன்னும் ரூபா 2500-00க்கு 11-3-77 முழுத்தொகை கொடுக்கும் வரை வருடமொன்றுக்கு 24% வீத வட்டியும் அறவிடப்படும். இதில் ரூபா 4500-00 கொடுக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

1. சிறுவிளானில் உள்ள 2½ பரப்புக் கொண்ட அத்துவம்புலம் உறுதி இலக்கம் 1446/5 சிறுவிழான் சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை பெண் அந்தோனியாப்பிள்ளைக்கு நன்கொடையாக மரியாம்பிள்ளை மகள் மரியம்மாவுக்கு வழங்கப்பட்ட காணி எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சூசானம் பெண் செபஸ்தியாம்பிள்ளையின் காணி பிலிப்பாத்தை பெண் பொன்னையாவின் காணி, தெற்கு மரியாம்பிள்ளையின் சூசைப்பிள்ளையின் ஆதனம்.

2. சிறுவிழான் நிலப்பரப்பு 1 எல்லை. கிழக்கு பெறுநரின் எஞ்சிய பகுதி, வடக்கு திரேசியா பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம், மேற்கு இராயப்பு முத்துத்தம்பியின் ஆதனம், தெற்கு மரியாம்பிள்ளை மரியம்மாவின் காணி இதடங்கலும்.

மூ. நல்லலிங்கம்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

8-10-80

7033

### 1978-ஆம் ஆண்டின் 4-ஆம் இலக்க விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) அதிகார்ச் சட்டத்தினுல் திருத்தப்பெற்றவாறுன 1978-ஆம் ஆண்டின் 7-ஆம் இலக்க விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பெற்ற விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழு

மேன்மை தங்கிய சனுதிபதி அவர்கள், 1978-ஆம் ஆண்டின் 4-ஆம் இலக்க விசேட சனுதிபதிவிசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தினுற் திருத்தப்பெற்றமைந்த 1978-ஆம் ஆண்டின் 7-ஆம் இலக்க விசேட சனுதிபதி விசாரணைக்குழுக்கள் சட்டத்தின் 5-ஆம் பிரிவினுல் மேதகையர் பால் உரித்தளிக்கப்பெற்ற தத்துவங்களைப் பிரயோகித்து விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணைச்சிட்டின் விசாரணை அலுவல் நியதிகளை 1980 ஜூலை 31 வரையில் காலப்பகுதியை நீட்டுவதன்மூலம் திருத்தியுள்ளார். அதன் தொடர்பில் விசாரணைசெய்து அறிக்கையிடுமாறு வேண்டப்படுகிறது.

ஆணையாளர்கள், 1978 ஏப்பிரல் 12-இல் வெளியிடப்பட்ட 312/2-ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பெற்ற அறிவித்தலோடியன்ற விசாரணை விடயங்கள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்தும், அரச சேவைகள், கூட்டுத்தாபனங்களிலுள்ள பணியாளர்களிடமிருந்தும், பிறரிடமிருந்தும் சொல்லப்பட்ட ஆணையை முழுமையாகவும், திறமையாகவும் நிறைவேற்றுவதற்கு உதவுமுகமாக, எழுத்துவழி முறையீடுகள் அல்லது தகவல்கள் கிடைக்கப்பெறின் மகிழ்வுறுவார்கள். ஆணையாளர்கள், விசாரணைகள் ஒவ்வொன்றும் தொடர்பான விடயங்கள் பற்றி வாய்மொழிமூலச் சாட்சியத்தைக் கேட்பதற்காக பகிரங்க அமர்வுகளை நடத்துவார்கள். அவர்கள் எழுத்திலுள்ள முறையீடுகளைச் செய்யும் அல்லது தகவல்களைக் கொடுத்துதவும் ஆட்களையும் பிறரையும் தம்முன்னர் சாட்சியம் அளிப்பதற்குக் கட்டளையிட்டழைக்கலாம்.

இந்த விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சான்றளிக்கும் எல்லா ஆட்களுக்கும், 1978-இல் 4-ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினுல் திருத்தப்பெற்றமைந்த மேல் சொல்லப்பட்ட 1978-இல் 7-ஆம் இலக்கச் சட்டத்தின் 14-ஆம் பிரிவின் நியதிகளின்படி எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளிலிருந்து பாதிப்பின்மை பெறுவர். அத்துடன், எவரேனும் அளிளுல் ஆணைக்குழுவுக்கு அல்லது அதன் முன்னிலையில் கொடுக்கப்படும் ஏதேனும் சான்று எவ் வழக்குத் தொடர்பிலும் அத்தகைய ஆளுக்கெதிராக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


முறையீடுகள் யாவும் நான்கு படிகளில் அமைந்தவையாய் விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளருக்கு 1981 சனவரி 5-ஆந் தேதிக்குப் பிந்தாமல் கிடைக்கும் வண்ணம் அனுப்பப்படுதல்வேண்டும்.

தலைவரின் கட்டளைப்படி,

ஜே. வை. டி. த. சில்வா,
செயலாளர்,
விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழு.

விசேட சனுதிபதி விசாரணை ஆணைக்குழு அலுவலகம்,
225, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு—7

7034



மன்னாருக்குச் செல்லும் வழியில் நொச்சிகாமம் ஐயனார் ஆலயத்திற்கு வருகைதந்த பிரதேச அபிவிருத்தி, இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு பொது மக்கள் சார்பில் நொச்சிகாமம் வர்த்தகர் திரு. மு. பொன்னுத்துரை மலர்மாலை அணிந்து வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம்.

# தீராத வயிற்றுவலி

## வயோதிபர் நஞ்சுக்குப் பலி!

(நெல்லியடி)

தீராத வயிற்றுவலியை நீக்க கிருமிநாசினியின் உதவியுடன் வயோதிபரொருவர் தமது உயிரைப் போக்கிக்கொண்டார்.

இச்சம்பவம் பருத்தித்துறை பொலிஸ் பகுதியிலுள்ள காட்டுப்புலம் என்னும் பகுதியில் நடைபெற்றுள்ளது. கந்தவனம் சின்னவன் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவர்.

வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளை முன்னிலையில் இவரது மரண விசாரணை நடைபெற்றது. பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. கே. வல்லிபுரம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

மரணவிசாரணையில் சாட்சியமளித்த திரு. கந்தவனம் சுப்பிரமணியம் கூறியதாவது:

'காலம்சென்றவர் வயிற்றுவலி காரணமாக கடந்த பல ஆண்டுகளாக அவதியுற்ருர். வயிற்றுவலி ஏற்படும் நேரங்களிலெல்லாம்வைத்தியம்செய்து கொள்வதுண்டு. எனினும் நோய் விட்டுவிலகவில்லை.

சம்பவ தினம் வீட்டார் எல்லோரும்கோயிலுக்குச் சென்ற சமயம் காலம்சென்றவருக்கு வயிற்றுவலி மோசமடைந்தது. வழமைபோல ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஆயத்தம் செய்தபோது காலமானவர் கிருமிநாசினியை குடித்துவிட்டதாக என்னிடம் அவர் கூறினுர். அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ருேம். அவர் காலமாகிவிட்டார். தாங்கமுடியாத வயிற்றுவலி காரணமாகவே அவர் இவ்வாறுசெய்தார் எனக்கருதுகிறேன்.'

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## புரட்டாதி கடைசி சனி

சித்தன்கேணி சிவன்கோவிலில் இம்முறை புரட்டாதி கடைசி சனி 25-ந் திகதி (11-10-80) வழமை போல் எள் எண்ணை எரித்தல் நடைபெறும் என்பதை அறியத்தருகிருேம்.

7023 சிவசிதம்பரேஸ்வர தேவஸ்தானம்.

## JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

Courses in (i) WELDING,
(ii) ADVANCED WELDING;
Commence on 1st November, 1980.
Applications close on 20th October, 1980.
Prospectus with application forms are available at the office at Rs. 2/- each.

DIRECTOR
Jaffna College Technical Institute,
Vaddukoddai, 7032

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 2445

நமசிவாயம் வடிவேலும் (2) பெண் மேனகா ஈஸ்வரி, காங்கேசன்துறை.

வழக்காளிகள்

எதிராக

கந்தையா பாலசுப்பிரமணியம் (2) பெண் மகேஸ்வரியும், சிறுவிளான், இளவாலை.

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B 2445-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 1765-00 பின் 16-6-78 தொடக்கம் 22-12-79 வரைக்கும் 18% வீதம் வட்டியும் அதன் பின் முழுத்தொகை இறுக்கும் வரை 5% வீதம் வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 378 சதம் 30 இதில் ரூபா 1000-00 செலவு தொகையால் ரூபா 300-00ம் கொரிக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவில்பற்று சிறுவிளான் இறை புளியடிக் கொல்லை பர நிலை லாட்சம் 4-ம் வான்பயிர் களுப், தெற்கெல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு வஸ்தியாம்பிள்ளை நிகிலாபிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம், மேற்கு சுந்தரலிங்கத்தின் மனைவியின் ஆதனம்.

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு
ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.
7022

"விதானை வளவு",
சித்தன்கேணி,
10-9-80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரான் - ஈராக் யுத்தம் மோசமடைகிறது

# கொரம்ஷார் துறைமுகநகரில் சண்டை நீடிக்கிறது!

லண்டன், அக். 8

**ஈரானுக்கும், ஈராக்கிற்குமிடையே தொடர்ந்து கடும் யுத்தம் நடைபெற்றுவருவதாக யுத்த முனையிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.**

வடக்கு ஈராக் மீது ஈரானிய ஜெட் விமானங்கள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

அதேநேரத்தில் ஈராக் படைகள் ஈரானின் எல்லை மாகாணமான குசெஸ்தானிலுள்ள தொழிற்சாலைகளையும், படை இலக்குகளையும் தாக்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் இரண்டு மின்சார நிலையங்களை ஈராக் விமானங்கள் அழித்துவிட்டதாக ஈராக்கின் முப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஈரானின் பெரும் துறைமுகநகரமான கொரம்ஷாரில் கடும் யுத்தம் நடப்பதாக ஈராக் செய்தி ஏஜன்ஸியொன்று கூறுகிறது.

கொரம்ஷர் துறைமுக நகரை ஈராக் கைப்பற்றிவிட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டாலும், இங்கு தொடர்ந்து சண்டை நடக்கிறது.

அதேவேளையில் ஈரான்-ஈராக் பிரச்னையை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளுமாறு அந்நாடுகளை சோவியத் யூனியனும், இந்தியாவும் கேட்டுள்ளன. (வெ)

## 'சோஷலிஸ நாடுகளிடமிருந்து பிரிக்கமுயற்சி'

மாஸ்கோ, அக். 8

''இஸ்லாமிய நாடுகளை சோஷலிஸ நாடுகளிடமிருந்து பிரிப்பதற்காக ஏகாதிபத்தியம் இஸ்லாத்தைப் பயன்படுத்த முனைகிறது'' என்று ஆசியா அன்ட் ஆபிரிக்கா'' என்ற சஞ்சிகை கூறியுள்ளது. அச்சஞ்சிகை மேலும் கூறியுள்ளதாவது:

''இஸ்லாமிய துருப்புச் சீட்டை''ப் பயன்படுத்த முனையும் ஏகாதிபத்தியம் சோவியத்யூனியன் ஆப்கனிஸ்தானில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இஸ்லாத்துக்கும் இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கும் கலாசாரத்துக்கும் எதிரானவை என்று காட்ட முயல்கிறது. இவ்வாறு சோவியத் விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம்தான் பின்பற்றும் ஈரானுக்கெதிரான அரசியல் நிர்ப்பந்தம், பொருளாதாரத்தடை, அரசியல் பயமுறுத்தல் கொள்கை காம்ப் டேவிட் பேச்சுக்களை உலகமக்களிடமிருந்து மறைக்க அது முயல்கிறது.

### புகையிரத நிலைய அதிபர் தாக்குதல் சம்பவம்:

## இராணுவத்தினர் மீது வழக்குத்தாக்கல்

### விசாரணை ஜன. 28–ல் ஆரம்பம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை புகையிரத நிலைய உப அதிபர் தாக்கப்பட்டது குறித்து இரு இராணுவ சிப்பாய்கள்மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியரான காங்கேசன்துறை புகையிரத நிலைய உப அதிபர் திரு. ஜே. பி. பிரேமதாசாவை கடமையைச் செய்ய விடாது தடுத்தது, அவரை கையாலும், சப்பாத்துக்காலாலும் தாக்கி சிறுகாயம் விளைவித்தது, அச்சமயம் மதுபோதையில் இருந்தது ஆகிய குற்றச் சாட்டுகளின் பேரில் இவ்வழக்கை காங்கேசன்துறைப் பொலிசார் தாக்கல் செய்தனர்.

ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. ரணசிங்கா, வி.ஏ. கருணதாசா ஆகிய இரு இராணுவ சிப்பாய்கள் இவ்வழக்கில் எதிரிகளாக உள்ளனர். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து விசாரணையைஜனவரி 28ம் திகதிக்கு நீதிபதி சி.ஆர். இராஜசிங்கம் ஒத்திவைத்தார்.

## இந்திய விமானப்படை 48-வது ஆண்டுவிழா

புதுடில்லி, அக். 8

இந்திய விமானப்படை இன்று தனது 48-வது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடியது.

இதனையொட்டி இந்திய ஜனாதிபதியும், உபஜனாதிபதியும், பிரதம மந்திரியும் இந்திய விமானப்படை அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் வாழ்த்துத்தெரிவித்துள்ளனர். (வெ)

## கியூபா ஜனாதிபதி- இந்திய அமைச்சர் சந்திப்பு

ஹவானா, அக். 8

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ், கியூபா ஜனாதிபதி திரு. பிடல் காஸ்ட்ரோவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்.

சர்வதேசப் பிரச்னைகள் குறித்து இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தையின்போது அடுத்தாண்டு புதுடில்லியில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் மகாநாடு சம்பந்தமான விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ அணிசேரா இயக்கத்தின் தலைவராக தற்போது இருந்துவருகிறார்.

இப்பேச்சுவார்த்தையின்போது இந்தியப்பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியின் செய்தியை கியூபா ஜனாதிபதியிடம் திரு. ராவ் கையளித்தார். (வெ)

# சர்வதேச பொருளாதார மன்றம் உருவாகவேண்டும்

## பாரத ஜனாதிபதி யோசனை

சோபியா, அக். 8

''அரசியல் உறுதிப்பாட்டுடனும், ஊக்கத்துடனும் பொருளாதார நெருக்கடியை உலக சமுதாயம் சமாளிக்கவேண்டும். உலக நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க சர்வதேச பொருளாதாரமன்றமொன்று உருவாக்கப்படவேண்டும்''

மேற்கண்டவாறு பல்கேரியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி, பல்கேரியா ஜனாதிபதியளித்த விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

''புதிய பொருளாதார முறையை உருவாக்குவதற்கு ஐ. நா.வில் நடந்த பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வைச் சமப்படுத்துவதற்கு உலக சமுதாயம் ஒருமைப்பாட்டுடனும் அரசியல் உறுதிப்பாட்டுடனும் இயங்கவேண்டும். நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பத்தால் தோன்றியுள்ள சவாலை மனித குலம் எவ்வாறு சமாளிக்கப் போகின்றது என்பதே இன்றுள்ள பெரும் பிரச்னையாகும்'' என்றுதெரிவித்த பாரத ஜனாதிபதி;

''இந்தியாவும், பல்கேரியாவும் பொருளாதார, விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளில் ஒன்றிற்கொன்று ஒத்துழைப்பை வழங்கவுள்ளன. எதிர்காலத்தில் இவ்விரு நாடுகளுக்குமிடையிலுள்ள நட்புறவு மேலும் வலுவடையும். இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் தலைமையின் கீழ் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும், மக்களுக்கு சமூகநீதி கிடைக்கவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.' என்று கூறினார். (வெ)

## சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(ஊரெழு)

ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தையொட்டி நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா பூங்காவன உற்சவத்தன்று நடைபெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

திரு. க. வை. தனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி பரிசளிப்பு விழாவில் ஊரெழு கிராமசேவை அலுவலர் திரு. அ.க. த. கிருஷ்ணராசா உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்கள். திரு. அ. கனகசூரியர் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்து நடாத்தியிருந்தார்.

மேற்படி சமய அறிவுப் போட்டியில் பின்வருவோர் பரிசில்கள் பெற்றார்கள்.

கீழ்ப்பிரிவு: செல்வி கு. தயாளினி செல்வன் க. கோணேஸ்ரன் செல்வி சி. வளர்மதி

கீழ்ப்பிரிவு: செல்வி இ. ஸ்ரீ தமயந்தி, செல்விஇ. லலிந்தி, செல்வன் ச. சுகந்தன்.

மத்திய பிரிவு: 1. செல்வன் செ. இந்திரகுமார், செல்வன் இ. சிவகுமார், செல்வன் க. அருள்நேசன்.

மேற்பிரிவு: 1. செல்வி க. சிவநிதி, செல்வி க. மாதினி, செல்வி சொ. பூமா.

மேற்பிரிவு: 2. செல்வி க. சொரூபாநிதி, செல்வன் க. இரகுபரன், செல்வி ந. நாகபூஷணி.

ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன. (இ)

# "தமிழ் ஈழக்குடியரசை நாம் நிறுவியே தீருவோம்!

## அதற்காக இறுதிவரை போராடுவோம்"

—'அமிர்'

(மாவிட்டபுரம்)

''தமிழ் மக்கள் எமக்கிட்ட கட்டளைக்கிணங்க சுதந்திர இறைமையுள்ள மதச் சார்பற்ற சோஷலிச தமிழ் ஈழக் குடியரசை நாம் நிறுவியே தீருவோம். தமிழ் ஈழ இலட்சியத்தை நாம் விட்டுவிட்டோம் என்பதோ இங்கு தமிழ்ஈழப் போராட்டகாலகட்டம் கடந்து விட்டதென்று கூறுவதோ விஷமப் பிரசாரமாகும். இப்பிரசாரங்களை உலக அரங்கில் முறியடித்திட எம்மால் முடிந்தவரை செயல்படுவோம்.''

இவ்வாறு ''மாவட்ட அபிவிருத்திச்சபையை ஏன் ஏற்றோம்?'' என்பதை விளக்கும் முகமாக காங்கேசன்துறையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரக் கூட்டமொன்றில்பேசிய எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

சட்டத்தரணி அ. குமரகுரு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:- ''எமது தமிழ் ஈழப் போராட்டத்திற்கெதிரான பிரசாரம் எதனையும் முறியடிப்பதில் எதிர்க்கட்சித்தலைவர் பதவிமூலமும் வேறுவாய்ப்புகள் மூலமும் நாம் முடிந்த அளவு செயல்பட்டுவருகிறோம், அமெரிக்காவில் பிரதமர் பிரேமதாசா பேசும்போது தமிழ் ஈழப் போராட்டகாலகட்டம் மறைந்து விட்டதாகக்கூறியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றனர். ஏதோ நாம் சமாதானமாக வாழ்கிறோம் என்பதை அவர்கள் உலகஅரங்கில் வைக்க முயல்கிறார்கள். அவர்களுக்கு வாய் இருந்தால் எங்களுக்கும் வாய் உண்டு. எதிர்ப்பிரசாரங்களைச் செய்து நாம் தமிழ் ஈழப் போராட்டத்தில் உறுதியாக நிற்கிறோமென்பதையும் அதற்காக இறுதிவரை போராடுவோம் என்பதனையும் எடுத்துக்கூறுவோம்.

''இந்த அரசாங்கம் ஏதோ எமக்கு பல நன்மைகளைச் செய்துவிட்டதென்று நாம் கூறவில்லை. வேலைவாய்ப்பில் எவ்வளவு அநீதிகள் இழைக்கப்படுகின்றன. காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கூட எவ்வளவோ அநியாயங்கள் நடக்கின்றன. இவற்றை எதிர்த்து வாதாடுவதில் நாம் என்றும் பின்னின்றதில்லை.

''மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றதால் நாம் அரசுக்கு ஆதரவாக நடக்கிறோம் என நினைப்பது தவறு. குறைந்தபட்ச சலுகைகள் சிலவற்றை இச்சபையால் நாம் பெறமுடிகிறது எமது நன்மை கருதியே இதனை நாம் ஏற்றோம். நாம் ஏற்றது தவறு என்று கூறுவோர் இச்சபையால் நன்மை இல்லை என்று மட்டும் கூறுகிறார்களே தவிர தீமை என்ன வென்று சொல்லுவார்களா?

''இச்சபையை ஜனாதிபதி நினைத்தவுடன் கலைக்கலாம் என்பதால் இதனால் என்ன பயன் ஏற்படப் போகிறது என்கிறார்கள் இப்படிக்கூறுவதால் எமது தமிழ் ஈழப்போராட்டத்திற்கு வலுவேற்றுவதாகவே அது அமையும். இதனை உலக அரங்கில் முன் வைத்து அனுதாபத்தை திரட்ட வாய்ப்பு ஏற்படும்'' என்றார்.

### யாழ். எம். பி. பேச்சு

யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் கூறியதாவது; ''மாவட்ட அபிவிருத்தியுடன் கூட்டணி அடங்கிவிடும் என சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. எமது பயணம் தொடர்ந்து நடைபெறுமென்பதில் மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். ஒரு தலைமையை உருவாக்குவது பெருங்கஷ்டம்; ஆனால் நினைத்தவுடன் முறியடித்து விடலாம். அதனால் எமக்குத்தான் தீமையேற்படும் என்றார்.

மற்றும் பலரும் பேசினர்.

## சங்கத்தில் மீண்டும் இணைந்தது

(பண்டத்தரிப்பு)

கடந்த இரண்டாண்டு காலமாக யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திலிருந்து பிரிந்திருந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மீண்டும் சங்கத்தில் இணைந்துள்ளது. அண்மையில் நடைபெற்ற சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் மேற்படி கல்லூரி சார்பில் கல்லூரி அதிபர் திரு.கே.சோமசுந்தரம் பங்கு பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கான்ஸ்டபிளுக்கு பிடிவிறாந்து

(மாவிட்டபுரம்)

தாக்குதல் வழக்கொன்றில் நீதிமன்றத்தில் ஆஜராகாத பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு மல்லாகம் நீதிபதியால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.

சுன்னாகம் மயிலங்காடு என்னுமிடத்தைச் சேர்ந்த

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இல்லறத்தாருடைய கடமைகளாவன -ஜீவர்களிடத்து அன்பு, பக்தர்களுக்கு சேவை, கடவுளின் புனித நாம உச்சாரணம்-ஆகியவையாம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### இன ஒதுக்கலின் உச்சக்கட்டம்

நாளுக்குநாள்அதிகரித்து வரும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும், சிறப்பாக தமிழ் மக்களின் எதிர்காலத்தையும் நினைத்து கவலைகொள்பவர்க்கு ஆறுதல் அளிக்கும் செய்தி தென் ஆபிரிக்காவிலிருந்து வருகிறது.

வெள்ளையர்கள் ஆதிக்கம் இன்றுநிலைத்திருக்கும் தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் சட்டபூர்வமான அடிப்படையில் செயற்பட்டுவருவதை நாம் அறிந்திருக்கிறோம்.

நீண்டகாலம்நடைபெற்ற போராட்டத்தின் பயனாக, வெள்ளையர் வதிக்கும் இடங்கள் வேறாகப் பிரிக்கப்பட்டு மற்றையவர்களுக்குப் பிரத்தியேகமான பகுதிகள் தலைநகரான ஜோஹன்னர்ஸ்பேர்க்கிலே வழங்கப்பட்டன.

இப்பிரிவினை, வெள்ளையர்களின் பெருமையை நிலைநாட்டுவதோடு இனக்குழப்பங்களையும் கலவரங்களையும் தடுக்க உதவுமென்றே ஏற்படுத்தப்பட்டது.

ஆணவ மலத்தைப்போல் ஏகாதிபத்திய வெறிபிடித்த வெள்ளையராட்சி இன ஒதுக்கல் சட்டத்தில் எவ்வித மாற்றத்துக்கும் இடங்கொடுக்கவில்லை. காலகதியில் எழுந்த இயற்கைப் பிரச்னை நீதிமன்றத்துக்கு செல்வதாயிற்று.

இனவாரியாகப் பிரிக்கப்பட்ட பெரும்பகுதிகளில் வெள்ளையரல்லாதவர்களுக்கும் தனித்தனி பிரிவுகள் உண்டு, கறுத்தவர், நிறத்தவர், ஆசிய நாட்டவர் என்ற பாகுபாடுகளை அடிப்படையாகக்கொண்டேநாட்டின் அபிவிருத்தித்திட்டம் அமைந்திருக்கிறது.

உணவு, உடை, உறைவிடம்-இம்மூன்றுமே மனிதனின் அடிப்படைத்தேவைகள். இவற்றையே மனிதனின் அடிப்படை உரிமைகளாக சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் முதலிடம் கொடுக்கின்றது. இந்த இன்றைய மனிதாபிமானம் வளர்ச்சியடைகின்ற யுகத்திலே, தென் ஆபிரிக்காவில் நாட்டுக்குச் சொந்தமான கறுத்தவர்களுக்கும், அவர்களின் கூடிய இனபந்துக்களான ஆசிய மக்களுக்கும் உயிர் வாழ உறைவிடம் இல்லாது வருகின்றது.

ஆயிரக் கணக்கான குடும்பங்கள் வீடில்லாமல் அவதிப்படுகின்றனர். வெள்ளையர் உல்லாசமாக வாழும் பிரத்தியேகப் பகுதிகள் சில நிறத்தவர் துணிச்சலாகக் குடியேறினர். இரு வழக்குகள் அவர்களுக்கெதிராகத் தொடரப்பட்டன. ஒன்று ஒரு நிறத்தவர்க்கெதிராக; மற்றது ஒருஇந்தியருக்கெதிராக. உயர் நீதி மன்றம் இவ்வித குடியேற்றம் இன ஒதுக்கல் சட்டத்துக்கு விரோதமானதென்று சட்டத்துக்கு வலிமை வழங்கியிருக்கிறது.

தென் ஆபிரிக்காவிலே தமது சகோதரர்களுக்கு மனித உரிமை மறுக்கப்பட்டதைக் கண்டு மகாத்மா காந்தி இந்திய அரசியலில் புகுந்து எமக்குச் சோகமான சம்பவங்களை நினைவூட்டுகின்றது. அதில் அந்த நாட்டில் அவர் பல்லுடைபட்டதும் 'கூலி பாரிஸ்ரர்' என்ற பட்டம் பெற்றதும் பிரதான நிகழ்ச்சிகள்.

இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்தே பல ஆசிய ஆபிரிக்க நாடுகள் அந்நிய ஆட்சியிலிருந்து நீங்க முடிந்தது. இருந்தும் தென் ஆபிரிக்கா போன்ற அடிமைக் குகைகள் இன்றும் இவ்வுலகின் பெருமையை கெடுத்து வருகின்றன.

பெருமை பெற்ற தலைநகரான ஜோஹன்னர்ஸ்பெர்க்கில் நிறத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் 4500 குடும்பங்கள் வீட்டுக்குக் காத்திருக்கின்றன. ஆயினும் அரசு 3700 வீடுகளுக்குத் திட்டமிட்டிருக்கிறது. எதிர்காலத்தை விட இன்றைய தேவைக்கு 10,000 வீடுகள் அவசியமென்பது நடுநிலைமை வகிக்கும் அவதானிகளின் கருத்து.

நீதிமன்றத்துக்கு வந்த வழக்கில் எதிரியானவர் மூன்று அறைகளும் ஒரு குசினியுங்கொண்ட வீட்டில் தனது மனைவியுடன் 12 பேர் கொண்ட குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர் ஒரு அறையில் 18 பேர் வசிக்கிறார்களென்றால் அது கல்கத்தாவின் கருஞ்சுவரை நினைவூட்டுகின்றது.

மனிதனை மிருகமாக மதித்து வரும் இவ்வித அட்டூழியம் என்று முடியும்? தென் ஆபிரிக்க மக்களுக்கு என்றுதான் மகாத்மா காந்தி, மாட்டின் லூதர் கிங் போன்றவர் தோன்றுவரோ?

# எவ்வுயிர்க்கும் தாயான அன்னையை வழிபடுவோம்

நா. அருமைநாயகம்
ஆத்மஜோதி நிலையம்

சக்தி வழிபாடாகிய அம்பிகை வழிபாடு மிகவும் பழமையுடையது. மொகஞ்சதாரோ, அரப்பா என்னும் இடங்களில் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த பொருள்களில் உலக அன்னையின் மண்சிலைகள் காணப்படுகின்றன. ஆய்வாளர்களின் கருத்துப்படி சிந்துவெளி நாகரீகக் காலம் ஏறத்தாழ கி. மு. 4000 ஆண்டுகட்கு முற்பட்டது. எனவே சக்தி வழிபாடு அதற்கு முன்னரே இருந்து வந்துள்ளமை தெளிவாகிறது.

அன்னைவழிபாட்டை இந்து மதம் மட்டுமின்றி கிறித்தவ மதமும் புத்தமதமும் போற்றுகின்றன. கிறித்துவமதம் அன்னை மரியாள் வழிபாட்டின் மூலமும், புத்தமதம் சாரா தேவியைப் போற்றுதன் மூலமும் அன்னை வழிபாட்டைப் போற்றுகின்றன.

சக்தியின் வடிவமே உலகம். சக்தியின் திருவிளையாடலைப் பஞ்சபூதங்களிலும், அணு முதல் அண்டம்வரை எங்கும் காணலாம். இந்தச் சக்தியின் திருவிளையாடல் நம்மனத்துக்கு எட்டாத வண்ணம் அகண்டாகாரத்தில் விரிந்தோடுகின்றன. பரந்த விண் அகத்தினுள்நாம்வசிக்கும்இந்த மண்ணகமானது ஓர் அணுப் புள்ளிபோன்றது. இதனுள் நடைபெறுகின்ற மாயாசக்தியின் திருவிளையாடல்கள் மனிதனை மயங்கச் செய்கின்றன.

அன்னைபராசக்தி அணுமுதல் அண்டம் வரை உள்ள அனைத்திலும் நிறைந்திருக்கின்றாள். குழந்தையை ஈன்ற பின்னர் அன்னையும் குழந்தையும்வேறு வேறாகிவிடுகின்றனர். ஆனால் அண்டங்களை ஈன்ற அன்னையாகிய சக்தி என்றும் அவற்றினின்றும் நீங்கியவள் அல்லள். அவளே உலகமாக இருக்கின்றாள். உலகம் முழுவதும் அன்னையின் தோற்றமே. எனவே இயற்கையை உள்ளவாறு உணர்வது இறைவியாகிய அன்னையை அறிவதாகும்.

அறிவு படைத்த மக்கள் எல்லா ஜீவராசிகளுடனும் அன்போடும் அருளோடும் வாழவேண்டும். இதற்குத்

(5ம் பக்கம் பார்க்க)

## இசைக்கு இலக்கணம் அமைத்த அறிஞர் இப்ன் ஸினா

மத்திய காலத்தில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மாபெரும் முஸ்லிம் சிந்தனையாளரான அபூ அலி இப்ன் ஸினா (அவிஸினா) வின் "இசையின் விஞ்ஞான விதிக்கோவை" என்ற நூல் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

சிந்தனையாளரும், மருத்துவரும், கணித நிபுணரும், கவிஞரும், இசைவாணரும், இசை அறிஞருமான இப்ன் ஸினா ஆயிரம் (980-1037) புஹாராவுக்கருகே வாழ்ந்தவர் 'இசையின் விஞ்ஞான விதிக்கோவை' என்ற நூல், நூறு பக்கங்களைக் கொண்டது. இசையோசையின் பண்பு விளக்கம், முதல் இசைக்கும் கவிதைக்கும் இடையிலான தொடர்புகளிலுள்ள இடைவேளை, வர்ணனை உருவாகும் முறைவரையான இசையின் தத்துவம்பற்றியும், இசைக் கலையின் கல்வி முறை பற்றியும் இந்நூல் ஆராய்கிறது. இசைபற்றி இப்ன் ஸினா ஐந்து ஆய்வுப் பணிகளைச் செய்துள்ளார். "மருத்துவ விதி" என்ற தமது நூலில் நோயைக் குணப்படுத்துவதில் இசைக்கு உள்ள அம்சங்களையும், அது மனிதன் மீது ஏற்படுத்தும் தாக்கம்பற்றியும் விவரிக்கிறார்.

"சந்தத்தின் இயக்கம் உச்சஸ்தாயியை நோக்கிச் செல்லும்போது மனம் படபடப்பும் ஒரு உக்கிரத்தன்மை பெறுவதையும், கீழ்ஸ்தாயியில் சஞ்சரிக்கும்போது அமைதியும் சாந்தமும் ஏற்படுவதையும் குறிப்பாகக் காணலாம்" என்கிறார் அவர்.

இசையின் விவரணம்பற்றி தாரி மொழியில் முதன் முதலில் எழுதிய அறிஞர் இப்ன் ஸினாவேதாம். இப்ன் ஸினாவின் நூலில் கவிதைச் சந்தம் குறித்தும் ஓர் அத்தியாயத்தைக் காணமுடிகிறது. இசைக்கும் கவிதைக்கும் இடையிலான தொடர்புகளை இப்ன் ஸினா ஆராய்கிறார்.

---ஏ. ஏ. எல்.

## நவராத்திரி காலத்தில் சனிவழிபாடு கூடாதா?

நவராத்திரி விரதம் ஆரம்பித்துவிட்டால் சனி பகவானுக்கு எள் எண்ணெய் தீபம் எரிப்பது கூடாதா?

நவராத்திரி விரத காலத்தில் சனி பகவானுக்கு எள் எண்ணெய் சிட்டி எரிக்கக்கூடாதென்று கடந்த காலங்களிலும் வதந்தி கிளம்பியதுண்டு. இம்முறையும் இந்த வதந்தி சற்றுப் பெரிதாகக் கிளம்பியிருக்கிறது. இதுபற்றி வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தான குரு ஸ்ரீ சாமி வி. வேங்கட சுப்பிரமணியக் குருக்கள் பின்வரும் விளக்கத்தைத் தருகிறார்.

நவராத்திரி பூஜா ஆரம்பத்தில் நவக்கிரக ஆராதனம் ஒரு கிரியையாகக் கூறப்பட்டு இருக்கிறது, இதைச் செய்து கிரக நாயகர்களின் அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டே நவராத்திரி பூஜை செய்வது முறை என வேதம், ஆகமம், கற்பம் ஆகிய சாஸ்திரங்கள் இயம்புகின்றன. நிற்க, நாம் வழிபடும் தெய்வங்களில் விஷ்ணு, அம்பாளுகுத்தான் விசேஷமாக நவக்கிரகம், நக்ஷத்திரம், ராசி முதலான தேவர்கள் விஷ்ணு பரமாத்மா, அம்பிகை ஆகி

5-ம் பக்கம் பார்க்க

## மக்கள் கருத்து

### நெல்லியடி பஸ்நிலையம்

வடமராட்சிப் பகுதியில் முக்கிய இடமான நெல்லியடிச் சந்தியில் பஸ்நிலையம், மக்கள் சந்தை என்பன அமைந்துள்ளன. அனைத்துவகை வர்த்தகமும் நடைபெறுவதனால் ஏனைய பகுதி வியாபாரிகள் நெல்லியடிச்சந்திக்குத்தினமும் வருகின்றார்கள். அதனைப் போல கண்டாவளை, துணுக்காய், விசுவமடு, முத்தையன் கட்டு விவசாயிகள் தத்தமது விவசாயப் பிரதேசங்களுக்குச் செல்வதற்காக நெல்லியடி பஸ் நிலையத்திற்கு வருகை தருகிறார்கள். இவர்களைவிட அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களும், மாணவர்களும் தத்தமது இடங்களுக்குச் செல்ல நெல்லியடி பஸ்நிலையம் அடைந்துதான் செல்லவேண்டும்.

இத்தனை முக்கியத்துவமான பகுதியில் பொதுமலசலகூடமொன்று இல்லாதது பெருங்குறையாகும். இக்குறையைப் போக்க நெல்லியடிப் பட்டின சபையும், ஏனைய இயக்கங்களும் முன்வரவேண்டும்.

மலசலகூடம் அமைப்பதற்கு ...... நிலமும் பெறுவதற்கு வசதியுண்டு. தொகுதி நாடாளு மன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் மூலம் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு மூலம் நிதிபெறலாம். பொதுக்காணி எனக் கூறப்படும் மடத்துக்காணியை மலசலகூடம் அமைக்கப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

ஆகவே இனியாவது காலந்தாழ்த்தாது பொறுப்பானவர்கள் முன்வந்து மக்களின் தேவையை—பாதுச்குறையைத் தீர்க்க முன்னின்று செயல்படுவார்களாக.

ஆ. வஞானம்
நெல்லியடி.

## நாடும் நடப்பும்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கருத்தடை செய்து கொண்டவர்கள் ஊக்குவிப்புப் பணம் பெறுவதற்காகக் கச்சேரியில் கியூவில் நின்றகாட்சி திட்டமிட்ட குடும்பத்துக்கு நல்லதொரு சாட்சியா பண நெருக்கடிக்கு சாட்சியா?

இதேசமயம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இருபத்திரெண்டு வயது இளம் பெண் மூன்று அழகான ஆண்குழந்தைகளை ஒரே பிரசவித்தில் பெற்றிருக்கிறார். ஒரு ஆண் குழந்தை பிறக்காதா என்று ஏங்கும் குடும்பங்கள் எத்தனை? இந்த மகராசி மூன்றும் ஆண் குழந்தைகளாகப் பெற்றெடுத்திருக்கிறார். மூன்று குழந்தைகளும் இறைவன் அருளால் சுகமே வளர்ந்து வரவேண்டும்!

இறைவன் அருள்மட்டும் இக்காலத்தில்போதுமா? இரக்க சிந்தையுடையோரின் உதவியும்அவசியம்வேண்டும். மூன்று ஆண்குழந்தைகளும் நலமுடன் வாழ்வதற்கு அந்தக் குழந்தைகளைப்பெற்ற தாயும் தந்தையும் குடும்பமும் வசதிபடைத்தவர்களல்ல! மிகக்கஷ்டமான குடும்பம் எனவே தர்மசிந்தையுடையவர்கள் உதவிசெய்ய வேண்டும்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பது தமிழில் ஒரு முதுமொழி.

ஒரு ஆண் குழந்தைக்காக ஏங்கும் வசதியுள்ள குடும்பத்தவர் இந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு உதவலாம்!

இந்தமாதத்திலிருந்து கருத்தடை செய்துகொள்வோருக்கு ஐநூறு ரூபாய் கிடைக்கவிருக்கிறது. இப்படிப் பணம் பெறுபவர்களும் அதில் ஒருபகுதியை யாவது இச்குழந்தைகளுக்குக் கொடுத்து உதவலாம்,

ஒருபுறம் கருத்தடை; மறுபுறம் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்,

இறைவன் திருவிளையாடலை என்னவென்பது?

ஃ ஃ ஃ

சென்ற 30ந் தேதி இப்பத்தியில் யாழ். ரயில் நிலையத்தின் சுரங்கப்பாதை பற்றி எழுதியிருந்தேனல்லவா?

இதைப்பார்த்த பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழிஅமுலாக்க, இந்துசமய, இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ, இராசதுரை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு இம்மாதம் 2ந் தேதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தின் பிரதியொன்றையும் எமக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"அன்புடையீர்,

**யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் ஒளிவிளக்கு இல்லாமை**

மேற்படி விடயம் சம்பந்தமாக 30-09-80ஆம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகை 'நாடும் நடப்பும்' என்ற தலைப்பின்கீழ் வந்த செய்தி ஒன்றினை இத்துடன் இணைத்துள்ளேன்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இரண்டாவது, மூன்றாவது மேடைகளுக்குச் செல்வதற்கான சுரங்கப்பாதைகள் இருளில் மூழ்கியிருப்பது பிரயாணிகளுக்கு அசௌகரியத்தைக் கொடுக்கும். எனவே இப்பாதைகளுக்கு மின்னொளி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மழைக்காலங்களில் இப்பாதைகள் வெள்ளத்தில் மூழ்குவதாகவும் மேற்படி செய்தி குறிப்பிடுகிறது. இதனையும்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '55வீதமாவட்டதெரிவுமுறை இரத்துச்செய்யப்பட வேண்டும்'

## மாணவர்மனுமீது புள்ளநாயகம் வாதம்

(கொழும்பு)

திறமைச் சித்திபெறும் மாணவர்கள் அனைவரையும் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்க முடியாத நிலையுள்ளதால் கொள்கைத் திட்டமொன்றை வகுத்து அதன்படி பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் அனுமதி பெறுகின்றனர்; அதனைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு செயல் படுத்துகின்றது."

இவ்வாறு பல்கலைக்கழக மாணவர் தேர்வில் 55 வீத மாவட்ட தெரிவுமுறையை எதிர்த்து றோயல் கல்லூரி மாணவர் கே. செனவிரத்தின மனித உரிமை மீறல் ஷரத்தின் கீழ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுமீதான விசாரணையின்போது பல்கலைக் கழகமானிய ஆணைக்குழுவின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. கே. என். சொக்ஸி சட்டவாதம் நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான திரு. ஜி. ரி. சமரவிக்கிரமா, திரு. ஜே. ஜி.டி. வீரரத்தின, திரு. எஸ். சர்வானந்தா ஆகியோர் முன்னிலையில் இம்மனு மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

55 வீத மாவட்ட தெரிவு முறை ரத்துச் செய்யப்பட வேண்டுமென மனுதார்தரப்பு சட்டத்தரணி திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம் உயர்நீதி மன்றத்தில் வாதிட்டதை யடுத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. என். சொக்ஸி அதை எதிர்த்துச் சட்டவாதம் நிகழ்த்தினார்.

அவர் அவ்வாதத்தில் தெரிவித்ததாவது; "55வீத மாவட்டத் தெரிவு இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான மாணவர்களுக்கு பரவலான சந்தர்ப்பம் அளிக்கின்றது.

"மனுதார் திறமையின்மீது அதிக நம்பிக்கை கொண்டிருந்தால் அவர் 30 வீத திறமைத் தெரிவின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படலாமே.

"திறமைக்கு மாத்திரம் பல்கலைக்கழக அனுமதியில் முழுக்க முழுக்க இடம் கொடுத்தால் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற பெரிய நகரங்களிலுள்ள மாணவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்குச் செல்லமுடியும். பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள மாணவர்களைப் போன்றே ஏனைய மாவட்டங்களிலுள்ள மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

மனுதாருக்கு எவ்வித மனித உரிமை மீறலும் நடைபெறவில்லை; திறமைப் புள்ளிகளின் அடிப்படையில் அவர் தெரிவு செய்யப்படவேண்டுமென்பதற்காக 55 வீதமாவட்டத் தெரிவு முறையை ரத்துச் செய்யக் கோருவது நியாயமாகாது.

# "சுதந்திரத்தை இழக்காது உரிமைபெறுவது தவறில்லை' – 'அமிர்

(மாவிட்டபுரம்)

நாம் அரசுக்கு ஆதரவு கொடுக்கவுமில்லை, இரகசிய பேச்சுவார்த்தைகள் எதிலும் ஈடுபடவுமில்லை, உயர் பதவிகளைப் பெறும் நோக்கமும் எமக்கில்லை என்று எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் பண்டிதர் நாகலிங்கம் தலைமையில் நடந்த கருத்தரங்கொன்றில் பேசும்போது கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது :-

நாம் அரசுக்கு ஆதரவு கொடுப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். இராசதுரை, தேவநாயகம் போன்று அரசு அநீதி செய்தாலும் அதனை ஏற்றிருந்தால் நாம் அரசுக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று கூறலாம். ஆனால் நாம் அப்படியல்ல. ஸ்ரீமாவோ கட்சியில் எமக்கு அநீதிகள் பல இழைக்கப்பட்டபோதும் அவருக்கு குடியியல் உரிமையை ரத்துச் செய்யும் சட்டமூலத்தை எதிர்ப்பதாக முதலில் நாம் தாம் கூறினோம்.

"பாலம் வேண்டாம் மதகு வேண்டாம் சுதந்திரமேவேண்டும் என நாம் கேட்டது உண்மைதான். சுதந்திரத்தை விற்று அவற்றைப் பெறக்கூடாதென்பதே எமது நோக்கம். சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காது எமது உரிமையைப் பெறுவதில் தவறில்லை. வீண் பிரசாரங்களால் மக்கள் ஏமாற்றமடைய வேண்டாம். நாம் எமது பயணத்தை தொடர்ந்து நடத்தியே தீருவோம்" என்றார்.

புலவர் மு. திருநாவுக்கரசு மாவை சேனாதிராசா ஆகியோரும் பேசினர். (அ)

# எவ்வுயிர்க்கும்...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

தியாகம் வீரமும் அவசியம். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் போன்ற அசுரத்தன்மைகளை அழித்து அன்பு, ஒழுக்கம், வாய்மை, ஈகை முதலிய நற்பண்புகளை வளர்க்கவேண்டும்.

அசுர குணங்களின் வடிவமே மகிஷமாகவும், வீரமும் அருளுமே தேவியாகவும் உருவகிக்கப்பட்டன.

இந்த உலக வாழ்க்கைக்குப் பொருள் அவசியம். அறிவு அவசியம். இதற்காகவே லக்ஷ்மியும் சரஸ்வதியும் வழிபடப்படுகிறார்கள். பச்சை நிறமுடையவள் அம்பிகை. இந்த நிறம் வளமையையும் செழிப்பையும் குறிக்கும். இதை அருளுபவள் மலைமகள். லக்ஷுமியின் சிவப்பு நிறம் தியாகம், அழகு குணங்களைக் குறிக்கும். கலைமகளின் வெண்மை நிறம் தூய்மை. வாய்மை முதலியவைகளைக் குறிக்கும். இவைகளையெல்லாம் பெற இம்மூன்று தேவிகளையும் நவராத்திரியில் வழிபடுகிறோம்.

பொம்மைகளைக் கொலு வைப்பது இறைவியின் விசுவரூபத்தைக் குறிக்கும். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்த சொரூபமே தேவியின் வடிவம் என்பதை இது காட்டுகிறது.

"ஒருநாகரீகத்தின் நிலையைத் தாய்க்குலமாகிய பெண்ணின் நிலை கண்டே நிச்சயிக்கலாம்" என்று சக்தி பற்றி நிறைய ஆராய்ந்து பல புத்தகங்கள் எழுதியுள்ள ஆர்தல் ஆவ்வான் குறிப்பிடுகிறார். தாய்க்குலமே சக்திக்குலம். எனவே பெண்ணை சக்தி என்று சிறப்பித்தனர் முன்னோர்.

லலிதா சகஸ்ரநாமத்தில் முதல் நாமமே 'ஸ்ரீமாதா' என்பது தான் இறைவனை வழிபடப் பலவிதமான பக்தி வழிகள் உள்ளன. தாயாக வழிபடுதல், தோழனாக வழிபடுதல், அடிமையாக வழிபடுதல், குருவாக வழிபடுதல், கணவன் அல்லது காதலனாக வழிபடுதல் என்பன. இவைகளில் தாயாக வழிபடுதல் சுலபமாக இறைவனை நெருக்கத்துடன் உரிமையுடன் கொண்டாட முடிகிறது.

தாய்க்குத்தான் தன்குழந்தைக்கு எப்போது பசிக்கும் எதற்காக அழுகிறது என்பதெல்லாம் தெரியும். அதே போல் தாயான அம்பிகைக்குத்தான் நம் கஷ்டங்களை அறிந்து அருள்பாலிக்கமுடியும் பசி, கஷ்டம் முதலியவை வரும் காலத்தில் குழந்தைகள் தாயைத்தான் அழைக்கின்றன.

இப்பொழுதென்னை ஆட்கொளவேண்டித் தாயாய் எனக்குத் தானெழுந்தருளி என்றார் ஔவை. தாய்போல அருள்வதில் ஒருதனிச்சிறப்பு உள்ளதையே இதுகுறிக்கிறது.

தாய்போன்ற இறைஅருளை வியந்தே நாவுக்கரசுப்பெருமான் "வாயானை மனத்தானை" என்றபாடலில் "தொடர்ந்து நின்ற தாயானைத் தவமாய தன்மையானை என்று குறிப்பிடுகிறார், நம் முன்னோர்கள் இறைவனை அம்மையப்பராக உமாமகேசுவரராக லஷ்மிநாராயணனாக ராதா கிருஷ்ணனாக வழிபட்டார்கள்.

தாய் குழந்தைக்கு நல்ல வழிகளைக் கற்றுக்கொடுத்து 'இம்படிச்செய்' என்று வழி காட்டுகிறாள். இந்த தாய் செய்யும் அரும்பணியைத் தான் வேதம் செய்கிறது. ஆகவே வேதமே தாயாக விளங்குகிறது. அவள் கூறுவதைக் கேட்டுச் சரியான வழியில் நடக்காவிட்டால் அவளே உக்கிரரூபியா — காளியாக மாறித்தண்டித்து அப்போதும் நல்வழிப்படுத்துகிறாள்.

தாய் அகிம்சையின் மறு உருவம் என்கிறார் காந்திஜி கரைகாணாத அன்பே அகிம்சை எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்கும் அன்னையை இந்த நவராத்திரி விழாக்களில் போற்றி வழிபட்டு உய்தி பெறுவோமாக.

# நவராத்திரி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யோரின் தேகத்தில் வியாபித்து மக்களுக்குச் சான்னித்திய மான அருளைக் கொடுக்கிறார்கள் என்பது வேதத்திலுள்ள உட்பொருளான கருத்தாகும். ஆகவே வீண் வதந்திகளைப் பொருட்படுத்தாது எமக்கு ஏற்படும் கிரகதோஷ நிவர்த்தியைப் பெற எவ்வித மனக் கிலேசமுமடையாது குறிப்பிட்ட தலைசிறந்ததாகிய சனீஸ்வர வழிபாட்டை தயங்காது கடைசிச் சனிக்கிழமை வழமைபோல் செய்து சாந்தி பெறுவார்களாக! எந்த நூலிலும் நவராத்திரியின்போது சனீஸ்வர வழிபாடு செய்யக் கூடாதென பிரமாணம் கூறவில்லையென்பதையும் தெரியப் படுத்த விரும்புகிறோம்.

## நாடும் நடப்பும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவனசெய்யும் பொருட்டு தங்கள் கவனத்திற்கு தருகின்றேன்.

0 0 . 0

அமைச்சர் இராசதுரை பத்திரிகையாளராக இருந்தவர்; அவரின் துரித நடவடிக்கைக்கு ஒரு சபாஷ்!

— ஊர்சுற்றி

# விதை உருளைக்கிழங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளினதும், விவசாய சங்கங்களினதும் கோரிக்கையைத் தொடர்ந்து விதை உருளைக் கிழங்கு பெற்றுக்கொள்வதற்காக பதிவுசெய்துகொள்ளும் கடைசித் திகதி இம்மாதம் 15-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. என். சிவமுத்துலிங்கம் தெரிவித்துள்ளார். (வெ)

# "தமிழுலகின் பேரிழப்பு"

[சரவணை]

தமிழ்ப் பேரறிஞர் சுவாமி தனிநாயகம் அடிகளின் மறைவு குறித்து கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. சு. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உதவி அதிபர் திருமதி சதாரூபவதி பாலசுப்பிரமணியம் பேசுகையில், அடிகளாரின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகின் மாபெரும் இழப்பாகும் என்றார். [அ]

# இன்று விரதாரம்பம்

(யாழ்ப்பாணம்)

சைவமக்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் இன் வியாழக்கிழமையே நவராத்திரி விரத பூஜைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று பிரதம இந்து மதகுருவும் சோதிடருமான சைவசித்தாந்த வித்தகர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்களும் இரகுநாதையரின் சகோதரர் சிவஸ்ரீ சோமசுந்தரம் ஐயரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நவராத்திரி விரதம் பிரதமை முதல் நவமியீறாகக் கொள்ள வேண்டும் என வேத ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன, இங்கு திதிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இது 8 இரவோ 9 இரவோ அல்லது 10 இரவோ வரக்கூடும். திதியின் பிரமாண ஏற்றத் தாழ்ச்சியினால் ஏற்படும் வித்தியாசம். இதற்கு முன்பும் 1947, 54, 56-ம் ஆண்டுகளிலும் இவ்வாறு விஜயதசமியுடன் 11 நாட்கள் நவராத்திரி விரதம் அமைந்துள்ளது.

# "மேலெழுந்த வாரியாகவன்றி சீனாவின் இன்றையநிலையை ஆழ்ந்து நோக்கவேண்டும்" –பேராசிரியர் கைலாசபதி

[யாழ்ப்பாணம்]

"மக்கள் சீனத்தின் இன்றைய நிலைமைகளை மேலெழுந்தவாரியான சில தகவல்களின் மூலமாகவோ அல்லது தனித்தனி அம்சங்களை மிகைப் படுத்திப் பார்ப்பதன் மூலமோ சரியான முறையில் புரிந்து கொள்ள முடியாது. சீனாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை ஒரு முழுமையாக ஆழ்ந்து நோக்குவதன் மூலமே அதன் சோஷலிச மார்க்கத்தின் தன்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்."

மேற்கண்டவாறு பேராசிரியர் க. கைலாசபதி மக்கள் சீனத்தின் 31-வது தேசிய தினக் கூட்டத்தில் பேசும்போது கூறினார். இலங்கை சீன நட்புறவுச் சங்க யாழ். கிளையினால் திரு. ஜி. எஸ். மனோகரன் தலைமையில் இக் கூட்டம் யாழ். றிம்மர் மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

திரு. கைலாசபதி தொடர்ந்தும் பேசுகையில், "அமெரிக்காவும், யப்பானும், ஏனைய மேற்கத்திய நாடுகளும் நவீன கைத்தொழில் வளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் உள்ளன. இருந்த போதிலும் அந்நாடுகளால் பெருகி வரும் பிரச்னைகளையும், வளர்ந்துவரும் சமூக முரண்பாடுகளையும் தீர்க்க முடியாத ஒரு கஷ்டமான நிலையை நாம் அவதானிக்க முடிகின்றது. மறுபுறத்தில் வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ள மூன்றாம் உலக நாடுகள் தமது அபிவிருத்திக்கான முன்னேற்றப் பாதையில் செல்ல முடியாதவாறு செல்வந்த நாடுகளினால் அமுக்கப்பட்டு வருகின்றன. இவ்விரு தன்மைகளுக்கும் புறம்பாக மக்கள் சீனம் தனது சோஷலிச நிர்மாணப் பாதையில் வேகமாக முன்னேறி வருகின்றது. இந்த முன்னேற்றம் சீன மக்களினது சிறந்த வாழ்வுக்கு உத்தரவாதம் அளித்துள்ள அதேவேளை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஒரு சிறந்த வழிகாட்டும் தன்மையையும் கொண்டுள்ளது" என்று கூறினார்.

திருவாளர்கள் மா. சின்னத்தம்பி, கே. செந்திவேல், சோ. தேவராசா, சி. வேலாயுதம் ஆகியோரும் உரையாற்றினர்.

# தனிச்சிங்களத்தில் படிவம்; ஆசிரியர் திண்டாட்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில்; ஆசிரியர்கள் புகையிரத சீசன் டிக்கட் பெறுவதற்குச் சிங்களமொழி தெரிந்தவர்களின் உதவியை நாட வேண்டியநிலைஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் சீசன் டிக்கட் பெறுவதற்கான படிவம் தனிச்சிங்களத்தில் அச்சிடப்பட்டிருப்பதே!

ஆசிரியர்களுக்கு; ஏனைய திணைக்களங்களைவிடத் தனியான புகையிரத சீசன் டிக்கட் விண்ணப்பப்படிவம் உள்ளது. இப்படிவம் தனிச்சிங்களத்திலேயே உள்ளது. இப்படிவம் தனித்தமிழிலோ அல்லது ஏனைய திணைக்களப் படிவம் போல் மும்மொழியிலும் காணப்பட்டாலோ நெருக்கடி நிலைமை ஏற்படாது என்று ஆசிரிய வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

# போட்டி பஸ் சேவை

(நெல்லியடி)

வடபிராந்திய இ.போ.சபை தனியார்துறையினருடன் போட்டி பஸ்சேவைகளைநடாத்தவுள்ளது.

தனியார் ஆதிக்கத்திலுள்ள வீதிகளில் நேரம் குறிப்பிடாத பஸ்சேவைகளை வடபிராந்திய இ.போ.ச ஆரம்பிக்கவுள்ளது.

வடபிராந்திய இ.போ.சபையின் தீர்மானப்படி பருத்தித்துறை டிப்போ பருத்தித்துறை-யாழ்ப்பாணம் சேவையையும், காரைநகர்-யாழ்ப்பாணம் சேவையை யாழ்ப்பாணம் டிப்போவும், செட்டிகுளம்-வவுனியா சேவையை வவுனியா டிப்போவும், முல்லைத்தீவு-பரந்தன் சேவையை முல்லைத்தீவு டிப்போவும், மன்னார்-தலைமன்னார் சேவையை மன்னார் டிப்போவும் நடாத்தவுள்ளது.

# இறுதிப் போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

அகில இலங்கை தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன, நாடக இறுதிப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகாவலி நீர் எப்போது வடக்கிற்கு வரும்?

## அமைச்சர் காமினி பேச்சில் வவனியா எம். பி. அதிருப்தி

[வவனியா]

''உலக வங்கியைச் சேர்ந்தவர்களும், ஏனைய நிபுணர்களும், மகாவலி திட்டத்தை வெகு நுணுக்கமாக ஆராய்ந்த பொழுது இன்னும் 12 வருடங்களுக்குள் வடமாகாணத்திலுள்ள இரணைமடுக் குளத்திற்கும் அதற்கப்பால் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் மகாவலி நீரைக் கொண்டுவரலாம் என்று திட்டத்திலும், வரைபடத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள்.''

இவ்வாறு நிருபர்களுக்கு அளித்த விசேஷ பேட்டியொன்றில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

''அண்மையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு விஜயம் செய்த காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா ''யாழ்ப்பாணத்திற்கும் மகாவலி நீர் வரும் என்று தாம் நம்புவதாகப் பேசியுள்ளார். கடந்த ஆண்டு பாராளுமன்றத்தில் மகாவலித்திட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்றபொழுது, நான் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதில் அளித்த மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா, ''எதிர்வரும் 8 தொடக்கம் 10 வருடங்களுக்குள் மகாவலி நீரை வவனியா மாவட்டத்திற்குக் கொண்டுவரலாம் என்பது நம்பிக்கையற்றது'' எனத் தெரிவித்தார்.

''மகாவலி நீரை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரலாம் என்பதல்ல, எப்போது மகாவலி நீர் வரும் என்பதுதான் வடமாகாணத்தின் ஏழை விவசாயிகளுடைய இப்போதைய கேள்வியாகும். இவர்களுடைய கேள்விக்கும் எதிர்பார்ப்பிற்கும் உரிய பதிலைக் கொடுக்காமல் பொறுப்புள்ள அமைச்சர் ஏதோதானேவெனப் பேசிவிட்டுச் சென்றுள்ளது கவலைக்குரியதாகவுள்ளது.'' என்கிறார்.

## ''கன்னியாஸ்திரிகளின் புனித பணிக்கு சில கல்வி அதிகாரிகள் இடையூறு''-யாழ். ஆயர் கவலை

(யாழ்ப்பாணம்)

''பாடசாலைகளில் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் கன்னியாஸ்திரிகள் கல்வி வளர்ச்சியில் பெரும் பணிபுரிந்து வருகின்றனர், ஆனால் சில கல்வி அதிகாரிகளின் நடவடிக்கைகள் கன்னியாஸ்திரிகளின் புனித பணிக்கு இடையூறாகவுள்ளது.''

இவ்வாறு யாழ். ஆயர். அதிவந். கலாநிதி பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவிலும் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் கவலை தெரிவித்தார்.

இவ்வைபவம் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் சங்கத் தலைவர் திரு. ஆர். ஜோசெவ் தலைமையில் நடைபெற்றது.

யாழ். ஆயர். அதி. வந். தியோகுப்பிள்ளை ஆண்டகை மேலும் பேசுகையில் ''ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போது போதியளவு கத்தோலிக்க ஆசிரியர்களையும் தெரிவு செய்யவேண்டும். இதனால் பயிற்றப்பட்ட சிறந்த கத்தோலிக்க ஆசிரியர்கள் பலரை உருவாக்கிக் கொள்ள முடியும். சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் ஏற்ற சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்க வேண்டியது ஆசிரியர் கடமையாகும்'' என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி அதிகாரி திரு. கே. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

### ஆசிரிய சங்கங்களின் தலையீடு

''வட மாநிலத்தில் சமய பாடத்திற்கு மாத்திரமன்றி விஞ்ஞானம், கணிதம்போன்ற பாடங்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. ஆசிரியர் பற்றாக்குறைபற்றி நாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம்.

''கஷ்டப் பிரதேசங்களில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை பற்றி ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை விடுக்கின்றன. ஆனால் சில ஆசிரியர்களை கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்யும்போது ஆசிரியர் சங்கங்கள் அவர்களின் இடமாற்றங்களில் தலையிடுகின்றன. இவை எமக்குப் பெரும் கஷ்டத்தை ஏற்படுத்துகின்றன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க ஆசிரியர் பற்றாக் குறை பற்றி மன்னார் பாராளுமன்ற உறுப்பினர், யாழ். ஆயர் ஆகியோர் உயர் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டும். சமுதாயத்தை நல்ல முறையில் உருவாக்கும் பணியில் கன்னியாஸ்திரிகள் பாடசாலைகளில் ஆற்றிவரும் பணி போற்றத் தக்கதாகும்.''

அருட் திரு. ஜெராட் அடிகளார் பேசுகையில், ''இன்று மாணவ சமுதாயத்தின் எதிர்ப்பை ஆசிரியர்கள் சம்பாதிக்கிறார்கள். மாணவர்களின் உள்ளக்கிடக்கையையும். எதிர்பார்ப்பையும் ஆசிரியர்கள் உணராமையே இதற்குக் காரணமாகும்'' என்றார்.

''அந்தக்காலத்து மாணவன் நிலையில் இன்றைய மாணவன் இல்லை. காலத்தின் கோலம் [illegible]

(7-ம்பக்கம் பார்க்க)

## ஆசிரிய நியமனம் எதிர்பார்த்திருந்த இந்தப் பரீட்சார்த்திகள் ''இலவுகாத்த கிளிகளா?

[நெல்லியடி]

கடந்த வருடம் அக்டோபர் மாதம், மன்னார் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட அடிப்படையிலான ஆசிரிய நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் கல்வி அமைச்சினால், பரீட்சார்த்திகளுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அன்றைய தினம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது, பரீட்சார்த்திகளிடமிருந்து கல்வி, நற்சாட்சிப் பத்திரங்கள், பிறப்புப் பத்திரங்களை கல்வியதிகாரிகள் கையேற்றிருந்தார்கள். ஒரு வருட காலத்தின் பின் இச் சான்றிதழ்களின் ஒரு பகுதி மீண்டும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை நியமனத்தை எதிர்பார்த்திருந்த பரீட்சார்த்திகளுக்கு கவலையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

## ''போக்குவரத்து வசதியில்தான் கிராமமுன்னேற்றம் தங்கியுள்ளது''

[உடுப்பிட்டி]

''எனது தொகுதியில் பின் தங்கியுள்ள இப்பகுதியின் நிலைமையை நான் நன்குணர்ந்துள்ளேன். அம்பன் கிராமத்தை முன்னேற்றுவதற்காக நான் பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றேன். தேர்தலுக்காகவோ அரசியல் லாபம் கருதியோ நான் கிராம விருத்திகளை மேற்கொள்ளவில்லை.''

இல்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பெற்றோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. என். துரைச்சாமி தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை எம்.பி. திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில்:-

''ஒரு கிராமத்தின் முன்னேற்றம் கிராமத்தின் போக்குவரத்துத் தொடர்பிலேயே பெரிதும் தங்கியுள்ளது. சிறந்த போக்குவரத்து வசதிகள் இருந்தாலே வெளியூர் மக்கள் அக்கிராமத்துடன் தொடர்பு கொண்டு அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். அம்பன் கிராமப் பகுதி இளைஞர்கள் பிரதான போக்குவரத்துப் பாதையைத் திருத்துவதில் ஆற்றியபணியை எம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த இளைஞர்களைப் பின்பற்றி அயல்க் கிராம இளைஞர்களும் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட வேண்டும்.

''எமது நாட்டுப் பத்திரிகைகளில் தினந்தோறும் அதற்கு கோடி ரூபா ஒதுக்கீடு, இதற்கு இத்தனை கோடி ரூபா ஒதுக்கீடு என்று கோடிக்கணக்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு இருப்பதை காணமுடிகின்றது. ஆனால் அவை நடைமுறையில் செயற்படுத்தப் படுகின்றனவா என்பது கேள்விக்குரியதாகும்.

''இன்று மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு பலகோடி ரூபா பணம் செலவு செய்யப்படுகின்றது. இதன் மிகுதிதான் தொகுதி அபிவிருத்திக்குச் செலவு செய்யப்படுகின்றது. போதிய அனுபவமற்ற சில நிபுணர்கள் அபிவிருத்தித் திட்டங்களில் சேவையாற்றுவதால்தான் எமது நாடு பின் தங்கிய பாதையில் செல்கின்றது.

''மாவட்ட அபிவிருத்திச் சபைகள் விரைவில் வரப்போகின்றன. நாம் அவற்றின் மூலம் பல நன்மைகளைப் பெறப் போகின்றோம்'' என்றார்.

பாடசாலை அதிபர் திரு. ச. செல்வநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார். செல்வன் வரதராஜனின் 'மென்டலின்' வாத்திய விருந்தும் இடம் பெற்றது. [அ]

## ''பற்றற்ற துறவியான அடிகளாருக்குதமிழ்ப்பற்றை துறக்க முடியவில்லை''

(யாழ்ப்பாணம்)

''பற்றற்ற துறவியாக வாழ்ந்த தனிநாயகம் அடிகளால் தமிழ்ப்பற்றைத் துறக்கமுடியவில்லை. சாதி மத பேதமற்று எல்லோரும் 'எம் அடிகளென' உரிமை கொண்டாடும் விதத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த அடிகளாரின் வாழ்க்கைப்பாதையை மாணவர்கள் நன்கறிந்திடவேண்டும். அவரது பணிகளைத் தொடர்ந்தாற்ற, ஒழுக்கத்தோடமைந்த உன்னத வாழ்வு வாழ மாணவ சமுதாயத்தினர் முன்வரவேண்டும்.''

இவ்வாறு, நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் தனிநாயகம் அடிகளாருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. லாசறஸ் குணநாயகம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- ''வாழ்நாள் முழுவதும் தமிழுக்காக உழைத்த உத்தமரை- உலக அரங்கில் தமிழை உயர்த்தி வைத்தவரை- தமிழாராய்ச்சி மாநாடுகள் சிறப்புற நடைபெற முன்னின்று உழைத்தவரை - ஆராய்ச்சிக் கட்டுரைகள் - ஆக்கங்கள் பல தந்து தமிழை அணிசெய்த அடிகளாரை தமிழ் பேசும் மக்கள் மறந்துவிடமுடியாது. அவரது வாழ்வு சகலமத மக்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்''

ஆசிரியர்கள் எஸ். மனுவல், எம். சேனாதிராசா ஆகியோரும் மாணவர் சிலரும் உரை நிகழ்த்தினர். அடிகளாரின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனையும் இடம்பெற்றது.

## காணுமற்போன சைக்கிள்களை கண்டுபிடிக்க உதவுங்கள்

'ஈழநாடு' இதழில் வாரம் இருமுறை திருட்டுப் போன சைக்கிள்கள் பற்றிய விபரம் தொடர்ந்து வெளிவரும். இந்தப் பட்டியலில் வெளிவரும் இலக்கங்களைக் கொண்ட சைக்கிள்களைக் கண்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிசார் பொதுமக்களைக் கோரியுள்ளனர்.

திருட்டுபோனஇடம்: யாழ்ப்பாணம்

| சைக்கிள் இல: | | திகதி: |
|---|---|---|
| 76 E 4008 | (ஹம்பர்) | 23-4-80 |
| | (றலி) | 28-4-80 |
| AG 92192 | (ஹம்பர்) | 3-5.80 |
| DB 1349 | (றலி) | 20-5-80 |
| BX 71060 | (றட்ஜ்[ | 24-5-80 |
| JH 89706 | (றலி) | 28-5-80 |
| G 1845 | (றலி) | 8-6-80 |
| KAB 5068 | (ஏசியா பைக்) | 4.6-80 |
| | (றலி) | 9-6-80 |
| 78 B 726 | (கஸல்) | 11-5-80 |
| 68 L 944 | — | 22-6-80 |
| 72 B 144 | (பி.எஸ்.ஏ.) | 15-7,80 |
| CD 2869 | (றலி) | 26.7-80 |
| AE 1696 | (றலி) | 3-6-80 |
| EF 1640 | (றலி) | 19-6-80 |
| GO 9420 | (கமில்டன்) | 10-7-80 |
| 78 ER 0525 | (ஈஸ்ரேன்) | 23-7-80 |
| சாவகச்சேரி | | |
| DE 29966 | (றலி) | 26-4-80 |
| 77 A 647 | (றயம்) | 11-5-80 |
| NE 79247 | (றட்ஜ்) | 30-5-80 |
| E 1505 | (றலி) | 30-5-80 |
| DD 95029 | (றலி) | 4-5-80 |
| பருத்தித்துறை | | |
| ER 8963 | (ஈஸ்ரேன்) | 25--4-80 |
| 71 H 251 | (ஹம்பர்) | 30-5-80 |
| DL 373604 | (றலி) | 6-6-80 |
| CP 1426 | (றலி) | 10-6-80 |
| திருநெல்வேலி | | |
| 69 M 11053 | (றலி) | 28-4-80 |
| உரும்பராய் | | |
| 72 A 124 | (கஸல்) | 26-4-80 |
| காங்கேசந்துறை | | |
| DL 61029 | (றலி) | 1-5-80 |
| தெல்லிப்பழை | | |
| I J 2708 | (றட்ஜ்) | 9-5-80 |
| ஊர்காவற்றுறை | | |
| DC 78754 | (றலி | 6-5-80 |
| BD 4517 | (ரேட் மாஸ்டர்) | 5-7-80 |
| பலாலி | | |
| DP 71062 | (றலி) | 10-5-80 |
| CS 2363 | (றலி) | 28-6-80 |
| மந்திகை | | |
| KZ 77499 | (றலி) | 14-5-80 |
| பண்டத்தரிப்பு | | |
| DA 48430 | (றலி) | 13-5-80 |
| DT 26639 | (றலி) | 29-7-80 |
| வல்வெட்டித்துறை | | |
| AK 187 | (றலி) | 1-5-80 |
| கோப்பாய் | | |
| OJ 3318 | (றலி) | 16-5-80 |
| புன்னாலைக்கட்டுவன் | | |
| FB 368 | (பி. எஸ். ஏ.) | 30-6-80 |
| நல்லூர் | | |
| DX 958 | (றலி) | 9-7-80 |
| கரவெட்டி | | |
| SA 40081 | (றலி) | 3-7-80 |

(சனிக்கிழமை தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.

ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன் மற்றும் பலர் நடித்த

வண்டிக்காரன் மகன்

(ஈஸ்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். — ராதாசலுஜா

இதயக்கனி

எதிர்பாருங்கள்

ஒரேவானம் ஒரேபூமி

WINDSOR (JAFFNA)

Daily at 10-30 a. m, 2-00, 4-30, & 7-00 p. m only

SUSAN HAMPSHIRE, FRANK FINLAY, MICHAEL PETROVITCH

in

"NEITHER THE SEA NOR THE SAND" Adults only - Color

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642

தினசரி 4 காட்சிகள்

100–வது வெற்றித் திருநாளை நோக்கி......

"வெள்ளி விழா"

நீயா? வண்ணச்சித்திரம்

Next Attraction: "THE DIRTY DOZEN"

எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

ராணி - யாழ்ப்பாணம்

காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45

கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா

சட்டம் என் கையில்

(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வெலிங்டன் (யாழ்நகர்)

தினசரி 3 காட்சிகள்

சனி-ஞாயிறு 4 காட்சிகள்

கடன் வாங்கி கல்யாணம்

லிடோ (யாழ்நகர்)

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - சாவித்திரி

அதிசயத்திருடன்


## சில கல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் எண்ணங்களும் உள்ளக் கிடக்கைகளும் மாற்றமடைகின்றன. ஆகையால் மாணவனுக்கு ஏற்ற வகையில், காலத்திற்கு ஏற்றபடி ஆசிரியனும் மாறவேண்டும் என்ருர்.

அருட் திரு. பி. ஜேசுநேசன் அடிகளார் பேசுகையில்:-

"ஆசிரியர் சம்பளத்துக்கு மாத்திரம் கடமையாற்றக் கூடாது. சமுதாயத்தின் அபிவிருத்திக்கும், நலனிற்கும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்" என்ருர்.

வண. பிதா தனிநாயகம் அடிகளாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

"கத்தோலிக்க ஆசிரியர்கள் குறுகிய வட்டத்தினுள்ளே தமது சேவையைத் தொடராது பரந்து விரிந்து கிறிஸ்துவை அறிய எங்கெல்லாம் மாணவர் சமுதாயம் இருக்கின்றதோ அங்கெல்லாம் தமது சேவையைச் செய்ய முன்வர வேண்டும்" என்று யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் முதலாவது ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வறிக்கையை சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ற் சமர்ப்பித்தார். அறிக்கையில் வேறு பல திட்டங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. [அ]

(உடுப். நி.)


ஹரன் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி-தேவிகா

அன்னை இல்லம்

வெஸ்லி (மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30,

சனி-ஞாயிறு 2-30

நாகேஷ் - சௌகார் ஜானகி

ஆலயம்

நாகம்ஸ் (சுன்னுகம்)

தினசரி 6-30, 930

சனி, ஞாயிறு 2-15

ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி

ஆறிலிருந்து அறுபதுவரை

ஸ்ரீதர் - யாழ்நகர்

தினசரி 10-30,, 2-30 6-30 & 9-45.

பலகால இடைவெளியின்பின் மக்கள் திலகத்தின் புதுப் படத்தினைக் காணும் சந்தர்ப்பம்!

புரட்சி நடிகர் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். புரட்சிக் கன்னி லதா வில்லனுக்கோர் சக்கரவர்த்தி நம்பியார் நாகேஷ், தேங்காய், நிர்மலா, கண்ணன் வி. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்த



மீனவ நண்பன்


## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபை தலைமைக்காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 803-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

26 T 0229

ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு

07 N 0495

ரூபா 40,000

மூன்றாவது பரிசு

20 Q 0953

ரூபா 10,000

தலா ரூபா 1534-20 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | A | 0590 | 20 | A | 0307 |
| 23 | A | 0123 | 01 | B | 0558 |
| 07 | B | 0128 | 10 | B | 0540 |
| 11 | B | 0192 | 24 | B | 0833 |
| 29 | B | 0709 | 31 | B | 0263 |
| 07 | C | 0632 | 10 | C | 0784 |
| 22 | C | 0086 | 11 | D | 0300 |
| 15 | D | 0443 | 02 | E | 0815 |
| 06 | E | 0484 | 13 | F | 0442 |
| 05 | F | 0050 | 26 | F | 0844 |
| 33 | F | 0360 | 08 | G | 0049 |
| 12 | G | 0139 | 15 | G | 0855 |
| 11 | H | 0508 | 18 | H | 0730 |
| 20 | H | 0 46 | 28 | H | 0464 |
| 12 | J | 0442 | 17 | J | 0485 |
| 18 | J | 0412 | 30 | J | 0297 |
| 31 | J | 0279 | 01 | K | 0262 |
| 13 | K | 0185 | 22 | K | 0540 |
| 22 | K | 0886 | 31 | K | 0428 |
| 03 | L | 0954 | 06 | L | 0344 |
| 27 | L | 0823 | 28 | L | 0296 |
| 03 | M | 0362 | 03 | M | 0732 |
| 20 | M | 0846 | 27 | M | 0444 |
| 28 | M | 0591 | 01 | N | 0587 |
| 08 | N | 0698 | 03 | O | 0508 |
| 11 | O | 0897 | 14 | O | 0616 |
| 17 | O | 0981 | 18 | O | 0003 |
| 06 | P | 0269 | 33 | P | 0808 |
| 16 | Q | 0243 | 18 | Q | 0237 |
| 21 | Q | 0304 | 24 | Q | 0934 |
| 02 | R | 0339 | 15 | R | 0408 |
| 20 | R | 0658 | 22 | R | 0585 |
| 24 | R | 0296 | 33 | R | 0668 |
| 16 | S | 0422 | 26 | S | 0357 |
| 26 | S | 0831 | 29 | S | 0002 |
| 31 | S | 0423 | 07 | T | 0972 |
| 21 | T | 0926 | 24 | T | 0481 |
| 27 | T | 0328 | 04 | U | 0899 |
| 10 | U | 0431 | 15 | U | 0789 |
| 28 | U | 0441 | 13 | V | 0700 |
| 22 | V | 0376 | 22 | V | 0434 |
| 26 | V | 0196 | 06 | W | 0975 |
| 14 | W | 0956 | 17 | W | 0333 |
| 07 | X | 0978 | 14 | X | 0813 |
| 17 | X | 0565 | 20 | X | 0696 |
| 22 | X | 0784 | 29 | X | 0300 |
| 33 | X | 0671 | 04 | Y | 0461 |
| 12 | Y | 0700 | 14 | Y | 0645 |
| 20 | Y | 0029 | 27 | Y | 0554 |
| 11 | Z | 0290 | 21 | Z | 0271 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

## கான்ஸ்டபிள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சின்னட்டி செல்லர் என்பவரது காணிக்குள் அத்துமீறிப் புகுந்து, அவரையும் அவரது மனைவி பவளத்தையும் கையால் அடித்து காயம் விளைவித்தது ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ரி. யோகேஸ்வரன் மீது இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கான்ஸ்டபிள் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால் அவருக்கு பிடிவிருந்து பிறப்பித்து விசாரணையை இம்மாதம் 30-ம் திகதிக்கு நீதிபதி திரு. சி.ஆ. ஜ.ஜசிங்கம் ஒத்திவைத்தார்.

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 23-ம் திகதி (வியாழக்கிழமை) (9 - 10 - 1980)

மேடம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும், மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும், இன்று சும்மா இருப்பதே சுகம்.

இடபம்: உறவுமுறைகள் பலப்படும், உற்சாகம் பெருகும், தந்தைவழித் தனவிருத்திக்கும் இடமுண்டு, பெரியவர் ஒருவரின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், இன்று சுகபலன்.

மிதுனம்: வெற்றிப்பாதையில் இன்று விறுநடை போடுவீர்கள், தொழிலில் முன்னேற்றமுண்டு, பொருள் வரவோடு வாகன சுகத்திற்கும் இன்று இடமுண்டு.

கடகம்; பொதுத்துறையில் ஆர்வம் பிறக்கும், மக்களின் ஆதரவு கிடைக்கும், அரசியல் வாதிகளுக்குச் செல்வாக்குப் பெருகும், பொன்னுன நாள்.

சிங்கம்: நெஞ்சமும் புண்ணுகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும், தொழிலால் தொல்லைகள் தோன்றும், மனதில் நிம்மதியற்ற நிலை உண்டாகும்.

கன்னி: துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும். துணைவரின் உடல்நலம் கெடும், பணமும் பெருமளவில் செலவாகும், பொறுமை விரும்பத்தக்கது.

துலாம்: வாழ்க்கை தேனுக இனிக்கும், சிலர் வாழ்க்கையில் அரசினர் விருதும் கிடைக்கக் கூடும், புதிய துறையின் மூலம் பொருளைத் தேடுவீர்கள், இன்று நல்ல முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்: எதிலும் அவசரக்கோலம் தென்படும், துரிதகதியில் செயலாற்றத் தொடங்கி தோல்வியை முத்தமிடுவீர்கள், சகோதர வழியால் சஞ்சலமும் உண்டு, தற்பெருமையைத் தவிர்த்துக்கொள்ளவும்.

தனுசு: தன்மான வாழ்வுடன் தனமுடைமையும்சேரும், தாயின் ஆதரவும் தவருமல் கிடைக்கும், முயற்சி செய்தால் முன்னேற்றம் உண்டு.

மகரம்: இதயம் இன்பத்தால் துள்ளும், கவர்ச்சிகாமான பொருட்களில் அதிக ஆர்வம் பிறக்கும், சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

கும்பம்: தூரத்துச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும், பிணிக்கு இடமளிக்காது உடல் நலனைப் பேணவும், துக்கமான தினம்.

மீனம்: கனிவான சம்பவங்கள் இடம்பெறலாம், காதலர்களுக்குக் கனகுஷியான தினம், சிலருக்குத் திடீர் திருமணமும் நடைபெறும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 2-0 கோல்களால் வெற்றி பெற்றது. இரண்டாம் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 2-1 கோல்களால் வெற்றி பெற்றது. மூன்றும் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3- 2 கோல்களால் வெற்றியீட்டியது.

உதைபந்தாட்டப் போட்டி மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரூட்டப்பட்ட
கொழும்பு
யாழ்ப்பாணத்திற்கான
நேரடி பயணச்சேவை
"வாசன்ஸ் சுப்பர்
ரவல்ஸ்" சேவிஸில்
பயணம் செய்யுங்கள்.
ஆசனப்பதிவு செய்யலாம்
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8095

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## ஜெயப்பிரகாஷ் நினைவு முத்திரை

புதுடில்லி, அக். 8 காலஞ்சென்ற இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர் ஜெயப்பிரகாஷ் நாராயணனின் ஞாபகார்த்தமாக இந்திய அரசு முத்திரையொன்றை இன்று வெளியிட்டது. இம் முத்திரையை இந்திய உப ஜனாதிபதி ஜனப் ஹிதாயத் துல்லா இன்று வெளியிட்டு வைத்தார். [வெ]

## யாழ். சிறிமா ஆதரவுக் கூட்டம் சர்வகட்சித் தலைவர்கள் பங்குபற்றுவர்

(யாழ்ப்பாணம்)
முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளைப் பறிக்கும் அரசின் முயற்சியைக்கண்டிக்கும் முகமாக யாழ். நகரில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, ஹரிஸ்பத்துவ 2வது எம். பி. திரு. ஆர். பி. விஜயசிறி ஆகியோர் உட்பட பல தமிழ்-சிங்கள சர்வகட்சித் தலைவர்கள் உரையாற்றுவர்.

யாழ். முற்றவெளி மைதானத்தில் இம்மாதம் 12-ம்திகதி ஞாயிறன்று நடைபெற உள்ள இக்கூட்டத்தில்திரு. வி. தர்மலிங்கம் (தமிழர் கூட்டணி), திரு பி.மகேந்திரராஜா(தமிழ்க் காங்கிரஸ்), திரு. கோடீஸ்வரன் (சுயாட்சிக்கழகம்), திரு இறைகுமாரன் (இளைஞர் பேரவை - விடுதலை அணி) உட்பட பலர் உரையாற்றுவர். (செ)

## துரையப்பா அரங்கில் நடைபெறுது

(பண்டத்தரிப்பு)
யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை இம் முறை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்துவதில்லை என்றும் இதற்காக யாழ். நகரிலுள்ள மூன்று கல்லூரிகளின் விளையாட்டு மைதானங்களை தெரிவு செய்து அங்கு சுற்றுப் போட்டிகளை நடாத்துவது என்றும் கடந்த வாரம் நடைபெற்ற யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்க பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### புதிய தலைவர்

இவ்விளையாட்டுச்சங்கத்தின் புதிய தலைவராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். ரி. சாரி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொதுச்செயலாளராக யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த திரு. என். சோமசுந்தரமும் பொருளாளராக கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. கே. பஞ்சலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

## "கலாசாரக்கல்விக்கு அரசுஏன் ஊக்கமளிக்கிறது?" வடமாநிலக் கல்வியதிபதி விளக்கம்

(உடுப்பிட்டி)
'புத்தகக் கல்வியின் மூலம் மாத்திரம் மாணவர்கள் பூரண அறிவைப் பெற்றுவிட முடியாது. மாணவர்கள் கலைத் துறையிலும் ஈடுபடவேண்டும். கலைகள் வாழ்க்கையை வளம் படுத்துகின்றன' என்று வடமாநிலக் கல்வி அதிபதி திரு. கே. சிவநாதன் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட சங்கீத, நடன, நாடகப்போட்டிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இப்பரிசளிப்பு வைபவம் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் கல்வி அதிகாரி திரு. கே. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

வடமாநிலக் கல்வி அதிபதி திரு. சிவநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'இசை, நடன, நாடகக்கலைகள் மாணவர்களைத் தெய்வீக வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. இதனாலேயே அரசாங்கமும் கலாச்சாரக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

'பண்டைய பாரம்பரியக் கலைகள் தொடர்ந்தும் பாதுகாக்கப்படவேண்டுமானால் இப்பாரம்பரியக் கலைகளுக்கு நாம் புத்தூக்கம் கொடுக்க வேண்டும். சங்கீத, நடன ஆசிரியர்களுக்கு ஊக்கமளித்து மாணவர்களையும் கலைத்துறையில் ஈடுபடுத்தவேண்டும். பாரத நாட்டைப்போன்று எமது நாட்டிலும் சிறந்த கலைஞர்கள் உருவாக்கப்படவேண்டும்.' (அ)

## இத்தாலி செல்லும் யானை வாகனம்

(யாழ்ப்பாணம்)
யானைவாகனம் ஒன்று விரைவில் இத்தாலி நகருக்குச் செல்லவிருக்கிறது!

கடந்த வாரம், யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த இலங்கையிலுள்ள இத்தாலியத் தூதர், ஆலயமொன்றில் யானைவாகனத்தைப் பார்வையிட்டு, தமக்கு ஒரு யானைவாகனம் செய்துதரும்படி கேட்டிருந்தார்.

இதற்கிணங்க திருநெல்வேலியிலுள்ள ஒரு சிற்பாசாரியின் வீட்டில், 4 அடி உயரமான யானை வாகனம் ஒன்று தயாராகி வருகிறது. இதற்கான முழுச்செலவையும் இத்தாலியத் தூதர் வழங்கியுள்ளார். (கெ)

## வடபிராந்திய விற்பனைத்திணைக்களம்: ரூ. 57 லட்சம் நஷ்டம்!

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய விற்பனைத் திணைக்களத்திற்கு கடந்த நிதியாண்டில், 57லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மரக்கறி விற்பனையில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாகவே இப்பெருந்தொகை நஷ்டம் விற்பனைத் திணைக்களத்திற்கு ஏற்பட்டதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில் இவ்வருடத்தின் கடந்த 9 மாதங்களில் பத்து லட்சத்துக்கு அதிகமான தொகை லாபமாகக் கிடைத்துள்ளது. (கொ)

இன்று
கோலாகலமான திறப்புவிழா!
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்
ஸ்தாபனத்தை
இன்று (9-10-1980) வியாழக்கிழமை
காலை 8 மணிக்கு
வண. பிதா பிலிப் பொன்னையா
அவர்கள் திறந்து வைப்பார்.
வின்கோ
428, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
உங்களுக்குத் தேவையான
சகல வாகனங்களையும், வாகன யந்திரங்கள்,
உபகரணங்கள், கடற்றொழில் யந்திரங்கள்,
ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்கள்
என்பவற்றையும் குறித்த தினத்தில் வெளிநாடுகளிலிருந்து
தருவித்துத் தருவோம்.
உங்கள் ஆடர்களுக்கு முந்துங்கள்!
சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்
7042

## யாழ்ப்பாணத்தில்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்தின்கீழ் இயங்கும் என்றும் இந்நிறுவகத்தின் ஊடாக யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சென்னை மதுரை போன்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும் தமிழ் ஆராய்ச்சி நடத்தலாம் என்றும் திரு. திரு. துரைராஜா கூறினார்.

### அமிர் பாராட்டு

அடுத்துப் பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், மேற்படிதமிழ் ஆராய்ச்சி நிறுவகம் அமைக்கும் முயற்சி பாராட்டுக்குரியது என்றும் தமிழ் மக்களின் வரலாறுகள் திரித்துக் கூறப்பட்டுவரும் இன்றைய நிலையில் தமிழ் மக்களின் பாரம்பரியம், பண்பாட்டின் உண்மை நிலையை ஆராய்ச்சி செய்து உலகின் முன்வைக்க வேண்டும் என்றும் இதுவே மறைந்த அடிகளுக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலியாகும் என்றும் கூறினார். (ம-தி)

## கலவான—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெவில்சமரக்கோன் தலைமையில் கூடிய உயர்நீதிமன்றம் வெளியிட்டுள்ள இருபது பக்கங்கள் அடங்கிய தீர்ப்பில் திரு. பிலப்பிட்டியவின் தெரிவு செல்லுபடியாகாதென்று தெரிவிக்கப்பட்டது.

நீதியரசர் திரு. ஜி. டி. சமரவிக்கிரம, நீதியரசர் திரு. வின்சன்ட் தாமோரதரம் ஆகியோரும் நீதியரசர்கள் குழுவில் அடங்கியிருந்தனர்.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் ஒருவரான திரு. சரத் முத்தெட்டுவகம இத்தேர்தல் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஜனப். எம். எம். அப்துல் காதர், திரு. பிலப்பிட்டியாவின் தெரிவு செல்லுபடியாகாதென்று தெரிவித்தார்.

## தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த திரு. ராஜாராமை சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம், மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

நாளை மாலை 3 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவருடன் விசேட விமானமொன்றில் யாழ். வரும் இவரை யாழ். மேயரும் உறுப்பினர்களும் பலாலி விமான நிலையத்தில் வரவேற்று மாநகரசபையில் தேநீர் விருந்தளித்துக்கௌரவிப்பர். (ம-இ)

## வீடமைப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளன.

இம் மாதிரிக் கிராமத்தில் நிறுவப்பட்டு வந்த வீடுகள் பற்றி வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சுக்குக் கிடைத்த பல புகார்களைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஈரான் முழுமையான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கலாமென்றும் ஈரான் ஜனாதிபதி ஜனப் பாணி சதார் தெரிவித்துள்ளார்.

### டெலிவிஷன் நிலையமும் எரிகிறது

அபடான் எண்ணை சுத்திகரிப்பு ஆலை மீது ஈராக் விமானங்கள் இன்று என்றுமில்லாதவாறு குண்டு வீசியதையடுத்து அந்த ஆலையும் அதன் அருகேயுள்ள டெலிவிஷன் நிலையமொன்றும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருப்பதாகவும் அபடானை நோக்கி முன்னேறி வரும் ஈராக் படைகளை ஈரான் படைகள் தடுத்து நிறுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவதால் 'ஷட்-அல்-அரப்' பகுதியில் கடும்சமர் இடம்பெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

### முற்றுகச் சேதம்

'ஹொரம்சர்' நகரை முற்றுகையிட்டுள்ள ஈரர்க் படைகள் அந்நகரைமுற்றுகச் சேதப்படுத்தியுள்ளதாகவும் இந்நகரின் வடபகுதியில் சில இடங்களையும் தென்பகுதியையும் ஈரான் தம்வசமேவைத்துள்ளதென்றும் அந்நகரிலிருந்து வெளியேறியவர்கன் தெரிவித்துள்ளனர். இதே சமயம் 'ஹொரம்சர்' நகர்முழுவதும் தொடர்ந்து ஈரான் வசமே உள்ளதாக ஈரானிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### எச்சரிக்கை

ஈரான்-ஈராக்போரில் ஜோர்டான் நடுநிலைமை வகிக்க வேண்டுமென்றும் யுத்தத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் அது ஈடுபடக்கூடாது என்றும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

### ஈராக் குற்றச்சாட்டு

ஈராக்-ஈரான் பிரச்சினையில் சிரியாவும் லிபியாவும் ஈரானுக்கு ஆதரவளித்து வருவதாக ஈராக் குற்றம் சுமத்தியுள்ளது.

ஈரானின் மிகப்பெரிய எண்ணைச் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள 'அபடானில்' எண்ணை சேகரிப்பு நிலையமொன்றையும், எண்ணைத் தாங்கி ஒன்றையும் ஈராக்கியபடைகள் சேதப்படுத்திவிட்டதாகவும், அங்கிருந்த தொண்டர்கள் புதையுண்டுள்ளார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில்தெஹ்ரானின் விமான நிலையம் அமைந்துள்ள பகுதி மூன்றுவது தினமாகக் குண்டு வீச்சினால் தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் விமானப்படையின் பலம் குன்றி வருவதாக ஈராக் அறிவித்துள்ளது

பயிற்சி
றேடியோ-டெலிவிசன், எயர் கொண்டிஷனிங் மூன்று மாத டிப்பிளாமா பயிற்சிகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம். 18-10-80 அனைவரும்சேரலாம், நாஷனல் அக்கடமி, 11,மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7041

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GE 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone. 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org